# பகுதி II


பக்கம்

மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும் (i)

ஆளணி (xxxv)

## இரண்டாம் பகுதி

# மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்


| | பக்கம் |
|---|---|
| கணக்குகளும் வங்கித்தொழில் தொழிற்பாடுகளும் | (i) |
| நாணய வெளியீடு | (vii) |
| வங்கித்தொழில் அபிவிருத்தி | (viii) |
| வங்கி மேற்பார்வை | (viii) |
| அபிவிருத்தி நிதி | (ix) |
| கிராமியக் கொடுகடன் | (xiv) |
| கிராமிய வங்கித் தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரி | (xvii) |
| ஊழியர் சேம நிதியம் | (xvii) |
| செலாவணிக் கட்டுப்பாடு | (xx) |
| பொதுப்படுகடன் | (xxii) |
| பிரதேச அலுவலகம்—மாத்தறை | (xxii) |
| பிரதேச அலுவலகம்—அநுராதபுரம் | (xxvii) |
| வாடிக்கையாளர் பணி | (xxxi) |
| வெளியீடுகள் | (xxxii) |
| ஆய்வரங்குகள் | (xxxiii) |
| அளவீடுகள் | (xxxiii) |
| பயிற்சி | (xxxix) |

# மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்

## கணக்குகளும் வங்கித் தொழில் தொழிற்பாடுகளும்

மத்திய வங்கியின் 1984 திசெம்பர் 31 இன் படியான ஐந்தொகையும், 1984 திசெம்பர் 31 உடன் முடிவடைந்த ஆண்டுக்கான இலாபநட்டக் கணக்கும் அட்டவணை 2.1 இல் காட்டப்பட்டுள்ளது.

1984 இறுதியில் மத்திய வங்கியின் மொத்த சொத்துக்கள்/பொறுப்புக்கள் ரூ. 332,718 இலட்சமாக விளங்கி, கடந்த ஆண்டில் இவற்றின் மட்டத்தைவிட சிறிதளவான அதிகரிப்பைப் பதிவு செய்தன. ''பன்னாட்டு ஒதுக்கு'' 73 சத வீதத்தால் பெருமளவில் அதிகரித்திருக்கையில், உள்நாட்டுச் சொத்துக்களும், ஏனைய சொத்துக்களும் கணக்குகளும் முறையே 21 சதவீதத்தாலும், 11 சத வீதத்தாலும் வீழ்ச்சியடைந்தன. சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் வடிவில் அமைந்த வங்கியின் பொறுப்புக்கள் 17.5 சதவீதத்தாலும், வைப்புக்கள் 3.7 சத வீதத்தாலும் அதிகரித்தன. வெளிநாட்டுக் கடன்பாடுகள் ரூ. 18,731 இலட் சத்திலிருந்து ரூ. 127 இலட்சமாகக் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தன. 1984 யூனில் ஆரம்பிக்கப்பட்ட மத்திய வங்கிப் பிணைகள் கணக்கு ரூ. 5,573 இலட்சங் கொண்ட நிலுவையைக் காட்டியது.

வங்கியின் 1984 ஆம் ஆண்டுக்கான வருமானம் ரூ. 31,617 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டைவிட 7 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. ஒதுக்குக் கணக்குகளுக்கான செலவு ஒதுக்கங்களும் பெறுமானத் தேய்வுக்கான ஒதுக்கங் களும் ஏற்படுத்தப்பட்டபின்னர் மத்திய வங்கியின் தேறிய இலாபம் ரூ. 15,015 இலட்சமாக விளங்கியது. நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 39 (ஆ) இன் விதிகளின்படி வங்கியின் மிகைக்கு ரூ. 10 இலட்சங்கொண்ட தொகை மாற்றப் பட்டது. மிகுதியான ரூ. 15,005 இலட்சம் கொண்ட தொகை, நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 39 (இ) இன் நியதிகளின்படி மத்திய வங்கிக்கான அரசின் வெளிநிற்கும் கடப்பாடுகளின் ஒரு பகுதியைத் தீர்ப்பதற்குப் பயன்படுத்துவதற் காக அரசுக்குச் செலுத்தப்பட்டது.

### வெளிநாட்டுச் செலாவணி

மத்திய வங்கி, ஐ. அ. டொலர்களுக்கெதிராக இலங்கை ரூபாவை வாங்கும், விற்கும் வீதங்களை ஒவ்வொரு வேலைநாட்களிலும் காலையில் தொடர்ந்து அறிவித்து வந்ததுடன், உள்ளூர் வர்த்தக வங்கிகளுடன் இவ்வீதங்களில் கொடுக்கல் வாங்கல் களையும் மேற்கொண்டது. மத்திய வங்கியின் முன்மாற்றுக் கொடுக்கல் வாங்கல் களும் அதன் ஐ. அ. டொலர் கொள்வனவுகளுக்கு 1984 மாச்சு வரையும் ஆறு மாதங்களாகக் கட்டுப்படுத்தப்பட்டது. இலங்கை ரூபாவுக்கெதிராக ஐ. அ. டொலர்களுக்கு வாங்கும், விற்கும் வீதங்களை மூன்றுமாத காலம்வரை குறிப்பதன் வாயிலாக மத்திய வங்கி இருவழி முன்மாற்றுச் செலாவணிச் சந்தையில் 1984 மாச்சு 26 இலிருந்து சேர்ந்து கொண்டது. 1984 இன் இறுதியில், மத்திய வங்கி உடன்மாற்று நடுத்தர வீதத்தில் ஒருமாத முன்மாற்று ஐ. அ. டொலர்களைக் கொள்வனவு செய்ததுடன், உடன்மாற்று நடுத்தர வீதத்துக்கு எதிராக 100 ஐ. அ. டொலர்களுக்கு இலங்கை ரூபா 7.50 கொண்ட கட்டணத்தில் விற்பனை செய்தது. மூன்றுமாத முன்மாற்று ஐ. அ. டொலர்கள் கொள்வனவு செய்யப்பட்டு இலங்கை ரூபா 0.50 கழிவுடன், உடன்மாற்று நடுத்தர வீதத்துக்கெதிராக 100 ஐ. அ. டொலர்களுக்கு இலங்கை ரூபா 22.00 கொண்ட கட்டணத்தில் விற்பனை செய்யப்பட்டது. ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய உடன்படிக்கையின்கீழ்க் கையாளப்பட்ட வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல்கள் இவ்வாண்டில் மாற்றமின்றியிருந்தன. ஆறு மாதங்கள் வரையிலான உடன்மாற்று, முன்மாற்று விற்பனைகள், கொள்வனவுகள் தொடர்ந்திருந்தன. தொடர்புபட்ட நாணயங் களாக வங்காளதேச தக்கா, பர்மிய கியத், இந்திய ரூபாய், ஈரானிய ரியால், நேபாள ரூபாய், பாக்கித்தான் ரூபாய் ஆகியன விளங்கின.

## 1984ஆம் ஆண்டு திசெம்பர் 31ஆம் நாளில்

### ஐந்தொகை — 1984ஆம் ஆண்டு

| 1983 திசெம்பர் 31 | | பொறுப்புக்கள் | 1984 திசெம்பர் 31 | |
|---|---|---|---|---|
| ரூபா | ரூபா | | ரூபா | ரூபா |
| | | **மூலதன கணக்குகள்** | | |
| 15,000,000 | | முதல் ... | 15,000,000 | |
| 68,000,000 | 83,000,000 | மிகை ... | 69,000,000 | 84,000,000 |
| | | **சுற்றோட்டத்திலுள்ள நாணயம்** | | |
| 7,859,148,039 | | தாள்கள் ... | 9,218,548,130 | |
| 314,397,956 | 8,173,545,995 | குத்திகள் ... | 381,489,551 | 9,600,037,681 |
| | | **வைப்புக்கள்** | | |
| 1,758,189,021 | | அரசு ... | 1,344,326,827 | |
| 54,845,058 | | அரச முகவர் நிலையங்களும் அரச நிறுவனங்களும் | 84,298,409 | |
| 3,413,245,644 | | வர்த்தக வங்கிகள் ... | 4,025,540,681 | |
| 4,894,195,284 | | பன்னாட்டு அமைப்புக்கள், வெளிநாட்டு அரசு வெளிநாட்டு வங்கி நிறுவனங்கள் ... | 5,075,581,166 | |
| 186,510 | | திறைசேரி உண்டியலில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 132,446,250 கொண்ட தொகை நீங்கலாக கட்டாயச் சேமிப்பு நிதி ... | 57,181 | |
| 599,684,518 | 10,720,346,035 | ஏனையவை ... | 590,214,937 | 11,120,019,201 |
| | 1,873,056,859 | வெளிநாடுகளிலிருந்து பெற்ற கடன்பாடுகள் ... | | 12,723,480 |
| | 775,000,000 | நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் ... | | 775,000,000 |
| | 110,000,000 | மூலதன உதவுதொகைக் கணக்குகள் ... | | 110,000,000 |
| | — | மத்திய வங்கிப் பிணைகள் ... | | 557,315,000 |
| | 11,361,957,704 | ஏனைய பொறுப்புக்களும் கணக்குகளும் ... | | 11,012,747,243 |
| | 33.096.906.593 | | | 33.271.842,605 |

### 1984 திசெம்பர் 31ஆம் நாள் முடிவுற்ற

| ரூபா | ரூபா | | ரூபா | ரூபா |
|---|---|---|---|---|
| | 1,303,766,732 | பொதுச் செலவுகளுக்கும் (சம்பளங்களேயும், நாணயத் தாள்கள், குத்திகள் மீதான செலவையும், காணியும் கட்டடங்களினதும், அலுவலகத் தளபாடங்களினதும் மீதான பெறுமானத் தேய்வையும், உள்ளடக்கும்) நாணய விதிச் சட்டத்தின் 38ஆம் பிரிவின் நியதிகளின்படி செய்யப்பட்ட ஒதுக்குகளுக்கும். | | 1,660,250,639 |
| | | 1984 திசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டுக்கான தேறிய இலாபம் | | |
| 58,642 | | நாணய சீராக்கக் கணக்கிற்கு நாணய விதிச்சட்டத்தின் 39 (அ) பிரிவின் நியதிகளின்கீழ் தீர்ப்பனவு செய்யப் பட்ட நிலுவை | — | |
| 1,000,000 | | நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 39 (ஆ) இன்படி தேறிய இலாபம் மிகைக்குக் கொண்டு செல்லப்பட்டது | 1,000,000 | |
| 1,650,000,000 | 1,651,058,642 | நாணயவிதிச் சட்டத்தின் 39 (இ) நியதிகளின்படி அரசிடமிருந்து மத்திய வங்கிக்கு வரவேண்டிய பொறுப்புக்களின் ஒரு பகுதியை தீர்ப்பதற்கு | 1,500,461,262 | 1,501,461,262 |
| | 2,954,825,374 | | | 3.161,711,901 |

1984ஆம் ஆண்டு திசெம்பர் 31ஆம் நாள் முடிவுற்ற மத்திய வங்கியின் கணக்குகள் இலங்கை அரசியல் அமைப்பின் பிரிவு 154 (1) இற்கு அமையவும் 1971இன் எண் 38 கொண்ட நிதிச் சட்டத்தின் பிரிவு 13 (1) இற்கு ஏற்பவும் நாணயவிதிச் சட்டத்தின் (அத்தியாயம் 422) பிரிவு 42 (1) இற்கு ஏற்பவும் எனது பணிப்புரையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

# உள்ளவாறு இலங்கை மத்திய வங்கியின் கணக்குகள்

## திசெம்பர் 31ஆம் நாளில் உள்ளபடி

| 1983 திசெம்பர் 31 | | சொத்துக்கள் | 1984 திசெம்பர் 31 | |
|---|---|---|---|---|
| ரூபா | ரூபா | | ரூபா | ரூபா |
| | | **பன்னாட்டு ஒதுக்கு** | | |
| 6,003,952,062 | | இலங்கைக்கு வெளியே உள்ள பணங்களும், நிலுவைகளும் | 9,842,850,625 | |
| 1,222,599,773 | | *வெளிநாட்டுப் பிணைகளும் திறைசேரி உண்டியல்களும்... | 2,715,646,847 | |
| 20,437,101 | 7,246,988,936 | கையிருப்பிலிருக்கும் சிறப்பு எடுப்பனவு உரிமை ... | 5,417,574 | 12,563,915,046 |
| | | **உள்நாட்டுச் சொத்துக்கள்** | | |
| | | கடன்களும் முற்பணங்களும் | | |
| 2,794,461,262 | | அரசிற்கு ... | 4,043,461,262 | |
| 623,491,947 | | ஏனையவர்றிற்கு–நடுத்தர, நீண்டகால ... | 649,853,108 | |
| 2,321,122,015 | | குறுங்கால ... | 1,662,301,280 | |
| 16,598,592,278 | | அரச, அரச உத்தரவாதப் பிணைகள் ... | 11,205,674,601 | |
| 110,000,000 | 22,447,667,502 | நிதி ஏனைய நிறுவனங்களுக்கான உதவுதொகைகள் ... | 110,000,000 | 17,671,290,251 |
| | 3,402,250,155 | ஏனைய சொத்துக்களும், கணக்குகளும் ... | | 3,036,637,308 |
| | | *அரச நிறுவனங்களிலிருந்து 1964 பெப்புருவரி 1இல் ரூபா 5,527,675 முகப்புப் பெறுமானத்திலும், 1965 மே 24இல் ரூபா 57,450 முகப்புப் பெறுயானத்திலும் பெற்ற பிணைகளை உள்ளடக்கும். (இப்பிணைகளின் மதிப்பிடப்பட்ட சந்தைப் பெறுமானங்கள், மேற்குறித்த நாட்களில் முறையே, ரூபா 2,933,697 ஆகவும், ரூபா 34,340/– ஆகவும் இருந்தன.) | | |
| | 33,096,906,593 | | | 33,271,842,605 |

## ஆண்டுக்கான இலாப நட்டக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| | ரூபா | | ரூபா |
| | 2,954,825,374 | பெறப்பட்ட வட்டி, ஏனையவை | 3,161,711,901 |
| | 2,954,825,374 | | 3,161,711,901 |

**வர்ணசேன இராசபுத்திரம்**
ஆளுநர்

**என். ஏ. தர்மபந்து**
முதன்மைக் கணக்காளர்

நாணய விதிச் சட்டத்தின் (அத்தியாயம் 422) பிரிவு 42 (2) இன் நியதிகளுக்கேற்ப நிதியமைச்சருக்கு ஒப்படைக்க வேண்டிய எனது அறிக்கை உரிய காலத்தில் ஒப்படைக்கப்படும்.

கணக்காய்வு அலுவலகம்,
கொழும்பு–7.
1985, எப்பிறல் 17

**டபிள்யூ. ஜீ. ஏபா**
கணக்காய்வாளர் நாயகம்

ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம்

மீளாய்வின் கீழான ஆண்டில், ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தினூடாக ஏற்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் மொத்தப் பெறுமதி முன்னைய ஆண்டின் ரூ. 46,180 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 73,705 இலட்சமாக விளங்கியது. மீளாய்வின் கீழான ஆண்டுக்கான தேறிய வரவுகள் 1983 இன் ரூ. 2,145 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 1,501 இலட்சமாக விளங்கியது.

கடன்களும் முற்பணங்களும்

1984 மாச்சு 26 இலிருந்து அரச, அரச உத்தரவாதப் பிணைகளை வைத்து வர்த்தக வங்கிகளால் பெறப்படும் பொது முற்பண வசதியை மத்திய வங்கி மீளப்பெற்றதுடன் கப்பலேற்றமுன்பான ஏற்றுமதி கொடுகடன் மீள் நிதியிடல் வசதியையும் அதிகரித்தது.

ஏற்றுமதிகளுக்கான மீள்நிதியிடல் திட்டங்களின்கீழ் வர்த்தக வங்கிக்கான மத்திய வங்கியின் கடன் வசதி இவ்வாண்டிலும் தொடர்ந்திருந்தது. ஏற்றுமதிக் கொடுகடன் மீள் நிதியிடல் திட்டங்களுக்கான பல்வேறு மாற்றங்கள் 1984 மாச்சு 26 இல் அறிமுகப்படுத்தப்பட்டன. இலங்கையின் ஏற்றுமதிகளை மீள் நிதியீட்டும் நோக்குடன் வாக்குறுதிச் சான்றிதழ்களைப் பிணையாக வைத்து வர்த்தக வங்கிகளால் பெறப்பட்ட குறுந்தவணை முற்பணங்கள் மீதான வட்டி வீதங்கள் அதிகரிக்கப்பட்டன. வர்த்தக வங்கிகளின் ஆகக்கூடிய கடன் வழங்கல் வீதம் ஆண்டுக்கு 13 சதவீதத்திலிருந்து 16 சதவீதமாக அதிகரிக்கப்பட்டமையுடன் மரபுவழியான ஏற்றுமதிகளுக்கான (வகை I) மீள் நிதியிடலுக்குரிய வட்டிவீதம் 10 சதவீதத்திலிருந்து 13 சதவீதமாக அதிகரிக்கப்பட்டது. மரபல்லா ஏற்றுமதிகளைப் பொறுத்தவரையில் (வகை II) வர்த்தக வங்கிகளின் கழிவுவீதம் 7சத வீதத்திலிருந்து 10 சத வீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. கடன் வழங்கல் வீதங்கள், கழிவுடன் 9.75 சதவீதத்திலிருந்து 12.75 சதவீதமாயும் முகப்புப் பெறுமதியில் ஆண்டுக்கு 10.8 சதவீதத்திலிருந்து 13.8 சதவீதமாகவும் காணப்பட்டன. செலாவணிக் கட்டுப்பாட்டாளரினால் குறிப்பிடப்பட்ட கால எல்லைக்குள் தொடர்பான ஏற்றுமதிகளினது விற்பனை வருவாய்கள் பெறப்படுமாயின் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் வர்த்தக வங்கிகளின் மீள் நிதியிடல் கடன்கள்மீது ஆண்டுக்கு 4 சதவீதப் புள்ளிகள் கொண்ட மீளளிப்பை வழங்கும்.

முன்பு கூறப்பட்டது போல மரபுவழி ஏற்றுமதிகளுக்குக் கிடைக்கக்கூடிய மீள் நிதியிடலின் அளவு, பொது முற்பண வசதிகளின்கீழ், முன்பு வழங்கப்பட்ட நிதியங்களினால் அதிகரிக்கப்பட்டது. அத்துடன் தேயிலை ஏற்றுமதிகளின் கப்பலேற்றமுன்பான பொதியிடல் கடனுக்கென ஒவ்வொரு வர்த்தக வங்கிக்கும் ஒதுக்கப்பட்ட எல்லைகளுக்குமேல் மேலதிக மீள் நிதியினை வழங்க மத்திய வங்கி ஆயத்தமாயிருந்தது. வகை II இன் கீழ் மீள்நிதியிடல் மீது எதுவித மேலெல்லைகளும் காணப்படவில்லை. வகை II இன் கீழ் மீள் நிதியிடலுக்குத் தகுதியுடையனவாகத் தேயிலை, இறப்பர், தெங்கு, ஆடைகள், இரத்தினக்கற்கள், கடலுற்பத்திகள், பெற்றோலிய உற்பத்திகள் தவிர்ந்த ஏனைய எல்லா ஏற்றுமதிகளும் குறிப்பிடப்பட்டன. மீள்நிதியிடல் காலப்பகுதி, ஏற்றுமதிகளின் இரு பிரிவுகளுக்கும், ஒவ்வொரு விடயத்துக்கும் என்ற அடிப்படையில் 30 நாட்கள் கொண்ட நீடிப்புடன் 60 நாட்களுக்குக் கட்டுப்படுத்தப்பட்டதுடன், ஆகக் கூடியது 90 நாட்களாகவும் காணப்பட்டது.

மீள்நிதியிடல் பெறப்பட்ட எல்லா ஏற்றுமதிகளுக்கும் முன்மாற்றுக் கொள் வனவு உள்ளடக்கம் தேவைப்பட்டது. ரூ. 500,000 அல்லது அதற்குக் குறை வான பெறுமதிகொண்ட நிச்சயமான கட்டளைகள் மீதான ஏற்றுமதிகள் அல் லது கொடுகடன் பத்திரங்களைப் பொறுத்தவரையில் 1984 ஏப்பிறல் 9 இல் இத்தேவைப்பாடு தளர்த்தப்பட்டது. முன்மாற்று ஒப்பந்தத்தின் காலஎல்லை அத்துடன் தொடர்பான கொடுகடன் பத்திரத்தின் முதிர்ச்சியுடன் அல்லது ஏற்றுமதி ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட ஆகப்பிந்திய வழங்கல் காலப்பகுதியுடன் தொடர்புபட்டதெனினும், எச்சந்தர்ப்பத்திலும் இக்காலப் பகுதி 6 மாதங்களை விஞ்சக்கூடாது. முன்மாற்றுகக் கொள்வனவு செய்யப்பட்ட வெளிநாட்டு நாண யம், இன்றியமையாத இறக்குமதிகளுக்காக மட்டும் முன்மாற்றுக விற்பனை செய்யப்பட்டதென்பதை வர்த்தக வங்கிகள் உறுதிப்படுத்த வேண்டும். மத்திய வங்கி வகை I இன் கீழ் ரூ. 80,783 இலட்சங் கொண்ட தொகையையும், வகை II இன் கீழ் ரூ. 22,419 இலட்சங்கொண்ட தொகையையும் 1984 இல் கடன் களாக வழங்கியது.

கூட்டுறவுச் சங்கங்களின் வாக்குறுதிச் சான்றிதழ்களின் பிணைகளுக்கு எதிராக அல்லது நெல், காய்கறி, ஏனைய குறிப்பிட்ட உணவுப் பயிர்கள் ஆகியவற்றின் உற்பத்தி தொடர்பாகத் தனிப்பட்டவர்களுக்கென வர்த்தக வங்கிகளுக்கு மத்திய வங்கி வழங்கும் முற்பணங்கள் மீதான வட்டி வீதம் ஆண்டுக்கு 1.5 சதவீதமாகத் தொடர்ந்துமிருந்தது. இத் திட்டத்தின்கீழ் 1984 இல் ரூ. 2,197 இலட்சங் கொண்ட தொகை வழங்கப்பட்டது. மக்கள் வங்கிக்கு/நெற்சந்தைப்படுத்தும் சபைக்கு வழங்கப்பட்ட மீள் நிதியிடலில் ரூ. 4,000 இலட்சத்திற்கு மேலான மீள் நிதியிடல் தொகைக்கான வீதம் 2 சத வீதப் புள்ளிகளால் திருத்தப்பட்டமை தவிர நெல் கொள்வனவையும், உள்ளூரில் பயிரிடப்படும் குறிப்பிட்ட சில பயிர்களின் கொள்வனவையும், களஞ்சியப்படுத்தலையும் நிதியீட்டுவதற்காகக் கூட் டுறவுச் சங்கங்களுக்கும், கமநலப் பணி நிலையங்களுக்கும், அதிகாரம் பெற்ற ஆட்களுக்கும் வழங்கப்பட்ட முற்பணங்களுக்காகப் பிணையாக வைக்கப்பட்ட வாக்குறுதிச் சான்றிதழ்களுக்கெதிராக வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட வங்கி முற்பணங்களின் மீதான வட்டி வீதம் ஆண்டுக்கு 3 சதவீதமாக மாற்றமின்றி யிருந்தது. இவ்வாண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ. 18,745 இலட்சம் கொண்ட தொகை வழங்கப்பட்டது.

### நடுத்தர நீண்ட தவணைக் கொடுகடன்

1984 ஆம் ஆண்டில், மத்திய வங்கி நடுத்தர நீண்ட தவணைக் கொடுகடன் நிதியத்தின் கீழ் மீள் நிதியிடல் திட்டத்தினைத் தொடர்ந்தும் செயற்படுத்தியது. வங்கியினால் வழங்கப்பட்ட மொத்த மீள் நிதியிடல் 1984 காலப்பகுதியில் ரூ. 1,690 இலட்சமாகவும், பெறப்பட்ட மொத்த மீளக் கொடுப்பனவு ரூ. 1,426 இலட்சமாகவும் காணப்பட்டது. நடுத்தர நீண்ட தவணைக் கொடுகடன் நிதியத்தி லுள்ள நிலுவை ரூ. 7,750 இலட்சமாக விளங்கியது. இதில் ரூ. 6,499 இலட்சம் வழங்கப்பட்டு கொடுகடன் நிறுவனங்களில் வெளிநிற்பதாயும் காணப்பட்டது.

### வர்த்தக வங்கிக் கொடுகடன்

1984 மாச்சு 26 இலிருந்து மத்திய வங்கி இன்றியமையாதனவல்லாத விடயங்களின் இறக்குமதிக்காக வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட முற்பணங் களின் மொத்தத் தொகை 1984 மாச்சு 23 இல் வழங்கப்பட்டு வெளிநிற்கும் அத்தகைய முற்பணங்களை விஞ்சக்கூடாதென்பதை உறுதிப்படுத்துமாறு எல்லா வர்த்தக வங்கிகளையும் வேண்டியது. இன்றியமையாதனவல்லாத இறக்குமதிகளைப்

பொறுத்தவரை 1984 மாச்சு 23 இல் வெளிநிற்கும் மட்டத்துக்கு அப்பால் எந்தவொரு தனி இறக்குமதியாளர்க்கும் கொடுகடன் வழங்கப்படக்கூடாதென வும் மத்திய வங்கி வர்த்தக வங்கிகளை வேண்டியது. இக்கட்டுப்பாடுகளுடன் ஏற்றுமதிகளுக்கும், வேளாண்மைக்குமானவை தவிர தனியார் துறைக்கு வழங்கப் பட்டதும் வெளிநிற்பதுமான மொத்த முற்பணங்கள், 1984 மே 11 இல் வழங்கப்பட்டு வெளிநிற்கும் அத்தகைய முற்பணங்களின் மொத்தத் தொகையின் 5 சதவீதத்துக்கும் அதிகமான தொகையை விஞ்சக்கூடாதென்றும் வர்த்தக வங்கிகள் வேண்டப்பட்டன.

**ஒதுக்குத் தேவைகள்**

வர்த்தக வங்கிகள்மீது விதிக்கப்பட்டு ஏற்கனவே நடைமுறையிலுள்ள ஒதுக் குத் தேவைகளுடன் சிறப்பு ஒதுக்குத் தேவையொன்றையும் மத்திய வங்கி 1984 நவெம்பர் 23 இலிருந்து அறிமுகப்படுத்தியது. சிறப்பு ஒதுக்குகள் மத்திய வங்கியின் ரூபா வைப்புக்கள் வடிவில் வைத்திருக்கப்பட வேண்டுமென வேண்டப் பட்டன. அத்தகைய ஒதுக்குகள், 1984 நவெம்பர் 14 இல் வைப்புக்களின் மட்டத்திலும் பார்க்க ஏற்பட்ட அதிகரிப்புத் தொகையின் அடிப்படையில், கேள்வி வைப்புப் பொறுப்புக்களிலும் தவணை சேமிப்பு வைப்புப் பொறுப்புக் களிலும் தீர்மானிக்கப்பட்டன. சிறப்பு ஒதுக்குகளாக வைத்திருக்கப்படவேண்டிய தொகை அதிகரிப்பு வகைகளின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படும். அதிகரிப் பின் வகை அடிப்படையில் ஒவ்வொரு வகையும் அவை தொடர்பாக ஒதுக்கு களாக வைத்திருக்கப்பட வேண்டிய தொகைகளும் கீழே தரப்பட்டுள்ளன.

| | வகை | சிறப்பு ஒதுக்குத் தொகை |
|---|---|---|
| ( i ) | 3% வரை | இல்லை |
| ( ii ) | 3% க்குமேல் 6% வரை | அதிகரிப்பின் 5% |
| ( iii ) | 6% க்குமேல் 10% வரை | அதிகரிப்பின் 10% |
| ( iv ) | 10% க்குமேல் | அதிகரிப்பின் 15% |

**திறைசேரி உண்டியல்கள்**

இரண்டாந்தரச் சந்தையில் திறைசேரி உண்டியல்களின் கொடுக்கல் வாங்கல் களை மத்திய வங்கி தொடர்ந்தும் மேற்கொண்டது. திறைசேரி உண்டியல்களின் விற்பனைகள் 1983 இன் ரூ. 189,469 இலட்சத்திலிருந்து 1984 இல் ரூ. 398,356 இலட்சமாகப் பெருமளவில் அதிகரித்தது. கொள்வனவுகளும் 1983 இன் ரூ. 126,688 இலட்சத்திலிருந்து 1984 இல் ரூ. 256,774 இலட்சமாக அதிகரித் தன. இத் திட்டத்தின் கீழான தொழிற்பாடுகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கு அழைப்புப் பணச்சந்தை வீதங்களுக்கும், இரண்டாந்தரத் திறை சேரி உண்டியல் சந்தை வீதங்களுக்குமிடையே மிகக் குறைந்த வருவாய் வேறு பாடே காரணமாகும்.

**இந்தியாவுக்கு குடிபெயர்ந்து செல்வோருக்கான உதவு தொகையும் வெகுமதிக் கொடுப்பனவும்**

1964 இன் இந்தியா–இலங்கை உடன்படிக்கையின் கீழ் இந்திய வம்சாவழித் தோட்டத் தொழிலாளர்களை மீள அனுப்புதலை விரைவுபடுத்துவதற்கான இரு திட்டங்களையும் அரசின் சார்பில் மத்திய வங்கி தொடர்ந்தும் செயற்படுத்தியது. அவையாவன:—

(அ) இந்தியாவுக்குத் திரும்பிச் செல்வோருக்கு ஒப்புதலளிக்கப்பட்ட உதவு தொகையின் 65 சதவீதத்துக்குச் சமமான தொகை அல்லது அதன் ஒரு பகுதி அத்தகைய குடிபெயர்ந்து செல்வோருக்குச் செலுத்தப்பட வேண்டுமென்ற நியதியைக் கொண்ட உதவுதொகைத் திட்டமும்.,

(ஆ) வெகுமதிக் கொடுப்பனவான ரூ. 500 உம், இத்தொகைகளில் இத்தொழிலாளர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவாக வழங்கப்பட்ட 65 சதவீதமுமாகும்.

இவ்விரு திட்டங்களையும் வர்த்தக வங்கிகளுக்கூடாக வங்கி தொழிற்படுத்தியது. உதவு தொகைத் திட்டத்தின் கீழ் 1984 இல் இந்தியாவுக்குத் திரும்பிச் செல்வோருக்கு ரூ. 116 இலட்சங்கொண்ட தொகை செலுத்தப்பட்டது. கடந்த ஆண்டில் நாட்டைவிட்டு வெளியேறிய 5,937 பேருக்கு வழங்கப்பட்ட வெகுமதிக் கொடுப்பனவுகளின் மொத்தத் தொகை ரூ. 49 இலட்சத்துக்கு வகைகூறியது.

### கட்டாய சேமிப்பு நிதியம்

மத்திய வங்கியானது 1971 இன் எண் 6 கொண்ட கட்டாயச் சேமிப்புக்கள் சட்டத்தினதும், 1972 இன் எண் 15 கொண்ட வருமான கட்டாயச் சேமிப்புக்கள் மீதான உச்சவரம்புச் சட்டத்தினதும் நியதிகளில் சேகரிக்கப்பட்ட பணத்தின் பாதுகாவலனுகத் தொடர்ந்தும் விளங்கியதுடன் அரசின் சார்பாகக் கட்டாயச் சேமிப்பு நிதியத்தின் நிருவாகத்தையும் மேற்கொண்டது. இவ்வாண்டில் பெறப்பட்ட 1,273 மீளளிப்பு விண்ணப்பங்களின் மீது உதவுதொகை செலுத்தியோருக்கு ரூ. 59 இலட்சத்தைச் (வட்டியுட்பட) செலுத்தியது.

### அரசாங்கக் கணக்குகள்

அரசின் வங்கியாளராகிய மத்திய வங்கி, தனது வங்கித் திணைக்களத்தின் அரசக் கணக்குக் கிளையானது தொடர்ந்தும் அரச திணைக்களங்கள், அரச முகவர்களும் நிறுவனங்களும் குறிப்பிட்ட சட்ட நியதிச் சபைகள் ஆகியவற்றின் கணக்குகளைப் பேணிவருகின்றது. 1984 திசெம்பர் இறுதியில் அரச கணக்குக் கிளையிலுள்ள தொழிற்படும் கணக்குகளின் எண்ணிக்கை 157 ஆக (அரச திணைக்களங்கள் 142 உம் ஏனையவை 15 உம்) இருந்தது.

## நாணய வெளியீடு

1984 திசெம்பர் 31 இல் மொத்தச் சுற்றோட்டம் ரூ. 96,000 இலட்சமாயிருந்தது. இது முன்னைய ஆண்டின் எண்தொகையான ரூ. 81,735 இலட்சத்தைவிட ரூ. 14,265 இலட்சங்கொண்ட அதிகரிப்பைப் பிரதிபலிக்கிறது. 1984 ஆம் ஆண்டில் முன்னைய ஆண்டைவிட சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தாள் ரூ. 13,594 இலட்சத்தாலும் நாணயக்குத்திகளின் சுற்றோட்டம் ரூ. 671 இலட்சத்தாலும் அதிகரித்தன.

மீளாய்வின் கீழான ஆண்டில் உயர் பெறுமதி நாணயத் தாள்களின் கேள்வி அமைப்பில் மாற்றமொன்று காணப்பட்டது. இதில் 1983 ஐ விட 1984 இல் அத்தகைய நாணயத் தாள்களின் மொத்தக் கேள்வியில் 23.5 சதவீத வீழ்ச்சியொன்று பதிவு செய்யப்பட்டது. முன்னைய ஆண்டில் கணிசமான அதிகரிப்பைப் பதிவு செய்த ரூ. 1,000, ரூ. 500 ஆகிய உயர் பெறுமதி நாணயத் தாள்களின்

கேள்வியானது கேள்வியமைப்பில் பின்னடைந்த தன்மையைக் காட்டியதுடன் முறையே ரூ. 2,410 இலட்சமும், ரூ. 1,090 இலட்சமும் கொண்ட வீழ்ச்சியும் அவதானிக்கப்பட்டது.

நாணயக் குத்திகளைப் பொறுத்தவரையில், மீளாய்வின் கீழான ஆண்டில் உயர் இன நாணயக்குத்திகளுக்கு வளர்ந்துவரும் கேள்வியைக் காணக்கூடிய தாயிருந்தது. இதன் விளைவாக உயர் பெறுமதி நாணயக் குத்திகளான ரூ. 1, 50 சதம், 25 சத நாணயங்களைக் கணிசமானளவில் பெற்றுக்கொள்வதற்குக் கட்டளைகள் வழங்கப்பட்டன. ரூ. 2, ரூ. 5 நாணயத்தாள்களுக்குப் பதிலீடாக நாணயக் குத்திகளை வழங்குவதற்கான முயற்சி முடிவாக்கப்பட்டது. 1985 இன் முற்பகுதியில் இப்புதிய வடிவிலமைந்த நாணயக் குத்திகள் வழங்கப்பட்டுத் தாள் நாணயங்களுடன் சுற்றோட்டத்தில் விடப்படுவதுடன், தாள் நாணயங்கள் சுற்றோட்டத்திலிருந்து படிப்படியாக மீளப் பெறப்படும்.

## வங்கித்தொழில் அபிவிருத்தி

1984 இறுதியில் 4 உள்ளூர் வங்கிகளையும், 21 வெளிநாட்டு வங்கிகளையும் உள்ளடக்கி 25 வர்த்தக வங்கிகள் தொழிற்பட்டன. வெளிநாட்டு வங்கிகளின் இரு பிரதிநிதித்துவ அலுவலகங்களும், இரு வணிக வங்கித் தொழில் கூட்டு நிலையங்களும், நாட்டில் அலுவல்களை மேற்கொண்டிருந்தன. இவ்வாண்டில் இலங்கையிலுள்ள வங்கிகளால் 13 கிளைகளும், ஒரு கொடுப்பனவு அலுவலகமும் திறக்கப்பட்டன. வரையறுக்கப்பட்ட கிறடிட் அன்ட் கொமர்ஸ் வங்கி 1984 மே 15ஆம் நாள் கட்டுநாயக்கா முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில் கிளையொன்றைத் திறந்தது.

இதன்படி 1984 இறுதியில் வங்கிக் கிளைகளின் மொத்த எண்ணிக்கை 1,022 ஆக விளங்கியதுடன் தொழிற்படும் கிளைகளின் எண்ணிக்கை 647 ஆக விளங்கி இலங்கை வங்கியின் 59 வேளாண்மைப் பணி நிலையக் கிளைகளை உள்ளடக்கியிருந்தது. மிகுதி மீளமைக்கப்பட்ட வேளாண்மை பணிநிலையக் கொடுப்பனவு அலுவலகங்கள், கச்சேரிக் கிளைகள் விரிவாக்க அலுவலகங்கள் ஆகியவற்றை உள்ளடக்கும். அதேவேளை அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் இன்ரநசனல் பாங்கிங் கோப்பரேசனுக்கு ஆசியாவுக்கான அதன் பிராந்திய அலுவலகத்தை நிறுவுவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டதுடன் இது 1984 மேயில் அலுவலைத் தொடங்கியது.

## வங்கி மேற்பார்வை

நாணய விதிச்சட்டத்தின் 29 (1) பிரிவின் கீழ் 1984/85 காலப்பகுதியில் வங்கி 10 வர்த்தக வங்கிகளின் பரீட்சிப்புக்களை ஆரம்பித்து இவற்றில் நான்கு பரீட்சிப்புக்களை முடித்தது. அத்துடன் வர்த்தக வங்கிகளின் தொழிற்பாடுகள் அவற்றால் வழங்கப்படும் மாதாந்த, காலாண்டு கூற்றுக்களின் அடிப்படையில் தொடர்ச்சியாக மேற்பார்வை செய்யப்படும். நாணய விதிச்சட்டம் பிரிவு 29 (2) இன் கீழ் வங்கி, வர்த்தக வங்கி தவிர்ந்த வங்கித் தொழில் நிறுவனமொன்றின் பரீட்சிப்பினையும் ஆரம்பித்தது.

1979 இன் எண் 27 கொண்ட நிதிக்கூட்டு நிலையக் கட்டுப்பாட்டுச்சட்ட ஏற்பாடுகளின் கீழ் நாணயச் சபையில் பதிவு செய்யப்பட்ட நிதிக்கூட்டு நிலையங்களின் மேற்பார்வையும், பரீட்சிப்பும் 1984 இலும் தொடர்ந்தது. பிரிவு 15 (1) இன் கீழ்ப் பதினெட்டு நிதிக்கூட்டு நிலையங்களின் பரீட்சிப்புக்கள் 1984

ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதுடன் இவற்றில் பன்னிரண்டு பரீட்சிப்புக்கள் முடிவடைந்தன. இச்சட்டத்தின் கீழ் நிதிக்கூட்டு நிலையங்களிடமிருந்து பதிவு செய்வதற்காகப் பெறப்பட்ட விண்ணப்பங்கள், மதிப்பீடு செய்யப்பட்டு இவ் வாண்டில் நான்கு கூட்டு நிலையங்கள் நாணயச் சபையில் பதிவு செய்யப்பட்டன. நிதிக்கூட்டு நிலையங்களினுல் வழங்கப்பட்ட மாதாந்தக் கூற்றுக்களும், அவற்றின் இலாப நட்டக் கணக்குகளும், ஐந்தொகைகளும் திரவத்தன்மைக்கும், மூலதன விகிதங்களுக்கும் ஒதுக்கு நிதியங்களுக்குமான மாற்றங்களுக்கும் சிறப்பான இட மளித்து ஆய்வு செய்யப்பட்டன.

வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் திட்டத்தின் கீழ் வர்த்தக வங்கி களினுல் நிறுவப்பட்ட வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகளின் கொடுக்கல் வாங்கல்களை மேற்பார்வை செய்யும் திட்டத்தினை வங்கி தொடர்ந்தும் மேற்கொண்டது.

## அபிவிருத்தி நிதி

1984 இல் நடுத்தர நீண்ட தவணை முதலீட்டுக்கான மத்திய வங்கியின் மீள் நிதியிடல் ஒப்புதல்கள் ரூ. 1,296 இலட்சமாக மிதமான மட்டத்திலிருந்தன. எனினும் இது முன்னைய ஆண்டின் ரூ. 748 இலட்சம் மட்டும் கொண்ட ஒப்புதல் களைவிட கணிசமானதொரு அதிகரிப்பினைப் பிரதிபலித்தது. வங்கித்தொழில் முறையின் மேலதிகத்திரவத்தன்மை 1984 இலும் தொடர்ந்ததெனினும் மத்திய வங்கியிடமிருந்தான வட்டி குறைந்த முதலீட்டுக் கடன்களுக்கான கேள்வி அதி கரித்தது. ஏற்றுமதித் துறைக்கான மீள்நிதியிடல் 1983 இன் ரூ. 370 இலட்சத்தி லிருந்து 1984 இல் ரூ. 791 இலட்சமாக அதிகரித்த வேளையில் கைத்தொழிலுக் கான மீள்நிதியிடல் ரூ. 70 இலட்சத்திலிருந்து ரூ. 491 இலட்சமாக அதிகரித்தது. மீள்நிதியிடலின் நியதிகளும், விதிகளும் 1984 இல் மாற்றமின்றியிருந்ததெனினும், சுற்றுலாவும் வர்த்தகக் கட்டிடங்களுக்கான அமைப்பும் இவ்வாண்டில் நிதியீட்டப் படவில்லை.

மறுபுறத்தில் சுற்றுலா வருகைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி உணவகத்துறையில் பெரும் திரவத்தன்மை நெருக்கடியை ஏற்படுத்தியதுடன் 1984 காலப் பகுதியில் சில நிவாரண நடவடிக்கைகளையும் வேண்டிநின்றது. இதன் விளைவாக, அரசின் வழிநடத்தலைத் தொடர்ந்தும் வங்கித்தொழில் நிறுவனங்களுடனுன கலந்துரை யாடல் தொடர்களின் பின்பும், உணவகங்களுக்கு ஓரளவான நிவாரண வழிமுறை களினை 1984 செத்தெம்பரில் மத்திய வங்கி அறிவித்தது. இவ்வழிமுறைகள் கடன்கள் மீதான முதற் தொகை வட்டி ஆகியவற்றிற்கான மீள் கொடுப்பனவு களை 1987 மாச்சு வரையில் சட்டரீதியாக நீடிப்பதனையும் நீண்ட காலத்திற்கு மேல் வெளிநிற்கும் படுகடன்களை மீள் அட்டவணைப்படுத்தலையும் உள்ளடக்கி யிருந்தன. பாதிக்கப்பட்ட வங்கிகளுக்கு திரவத்தன்மை நிவாரணத்தை வழங்கு வதற்காக மத்திய வங்கி, நிலுவையிலுள்ள வட்டியின் 60 சதவீதமான மீள் நிதியிடலை வழங்கியது. மீள அட்டவணைப்படுத்துதல் பயிற்சியில் காணப்பட்ட முன்னேற்றம் மிக மெதுவாகவிருந்ததெனினும் 1984 திசெம்பரில் கிட்டத்தட்ட 40 உணவகச் செயற்றிட்டங்கள் மீள அட்டவணைப்படுத்தலுக்காகக் கவனத்தில் எடுக்கப்பட்டன.

இரண்டாவது சிறு நடுத்தர அளவுக் கைத்தொழில் கடன்திட்டம் (சிநகை—11) 1984 இல் சிறிதளவு முன்னேற்றத்தைப் பதிவு செய்ததெனினும், நிதிய கடப்பாடுகள் மிகவும் குறைவாகவேயிருந்தன. உலகவங்கியுடனும் அரசுட னும் பங்குபற்றும் கொடுகடன் நிறுவனங்களுடனும் (பகொநி) நடாத்தப்பட்ட மீளாய்வுக்கூட்டத் தொடர்களின்பின்பு சிறு நடுத்தரஅளவுக் கைத்தொழில்களுக் கான பங்குபற்றும் கொடுகடன் நிறுவனங்களுக்குக் கிடைக்கக்கூடிய கடன்கள் 5 சத வீதத்திலிருந்து 1984 செத்தெம்பரில் 7 சதவீதமாக அதிகரிக்கப்பட்டது. தேனீ வளர்ப்பு, தோட்டக்கலை, பொருட்களின் வர்த்தகப் போக்குவரத்து வர்த்தக அளவிலான விலங்கு வளர்ப்பு, கொழும்புக்கு வெளியேயான கலர்ப்பட தயாரிப்பு,

நிலையான தொழிற்படும் முதல் நிதியீட்டம் போன்ற மேலதிகத் துறைகள் சிறு, நடுத்தர அளவுக் கைத்தொழில் கடன்களைப் பெறத் தகுதியுடையனவாகின. வெளிநிற்கும் சிறு நடுத்தரக் கைத்தொழில் கடன்களில் 1983 திசெம்பரில் மீளப் பெறப்படவேண்டியவற்றில் கிட்டத்தட்ட 40 சதவீதமானவை நிலுவை யாகக் காணப்பட்டமையால் மத்திய வங்கி, நேரடிச் செயற்றிட்ட பரிசீலனைகள் மூலம் அதன் வேலைகளைத் துரிதப்படுத்தியது (ஏறக்குறைய நாட்டின் எல்லாப் பகுதியிலும் 1984 இல் 243 பரிசீலிப்புக்கள்) ஆக்கவேலைகள் முக்கியமாகப் பிரச்சனைகளைக் கண்டறிவதற்கும், அவற்றின் புத்தாக்கத்திற்குமான பொருத்த மான விதந்துரைகளை மேற்கொள்வதற்கும் இறுதியாக மீளப் பெறுகைக்குமெனவே ஏற்படுத்தப்பட்டது. செயற்றிட்ட வளர்ச்சியில் மத்திய வங்கி நேரடியாகப் பங்கு கொண்டமை கடன்களை மீள அட்டவணைப்படுத்தலை ஏற்படுத்துவதற்கும் செயற்படாத செயற்றிட்டங்களின் புத்தாக்கத்திற்காக மேலதிக வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கும் உதவியாக அமைந்துள்ளது. அத்துடன் வங்கி பரிசீலனை கள் முடிந்த பின்பு கடன் செலுத்தத்தவறியோரில் பலர் கடனை மீளச் செலுத்தத் தொடங்கியுள்ளனர். இதனுல் மத்திய வங்கி உத்தரவாதத் திட்டங்களின் கீழ் உத்தரவாதமளிக்கப்பட்ட மூன்று தவணைகளுக்கும் அதிகமாக நிலுவையிலுள்ள பல கடன்கள் 1983 திசெம்பரின் 966 இலிருந்து 1984 திசெம்பரில் 850 ஆக வீழ்ச்சியடைந்தன.

### நடுத்தர, நீண்ட தவணைக் கொடுகடன் நிதியத் தொழிற்பாடுகள்

நடுத்தர நீண்ட தவணைக் கொடுகடன் நிதியத்தின் வகைகள் II, III, IV ஆகியவற்றின் கீழ் ரூ. 1,296 இலட்சங்கொண்ட மீள்நிதியிடலுடன் 45 விண்ணப்பங்கள் ஒப்புதலளிக்கப்பட்டன. இவற்றில் ரூ. 791 இலட்சங்கொண்ட மீள்நிதியுடனை 25 விண்ணப்பங்கள் ஒப்புதலளிக்கப்பட்டன. இவை இத்திட்டத் தின் வகை II இன் கீழான ஏற்றுமதி அடிப்படையிலான செயற்றிட்டங்களுக் காகும். ரூ. 491 இலட்சங் கொண்ட மீள்நிதியுடனை 17 விண்ணப்பங்கள் இவ்வாண்டில் கைத்தொழில் செயற்றிட்டங்களுக்காயிருந்தன. மீள்நிதியிடல் ஒப்பு தல்களின் பகுப்பொன்று அட்டவணை 2.2 இல் காட்டப்பட்டுள்ளது. 1983 ஆம் ஆண்டறிக்கையில் கொடுக்கப்பட்ட மீள்நிதியிடல் நிபந்தனை நியதிகள் மாற்ற மின்றியிருந்தன.

அட்டவணை 2.2

**நடுத்தர நீண்டகால கொடுகடன் நிதியம்**
**(வகைகள் II—IVஇன் கீழ் மீள்நிதியிடலின் ஒப்புதல்கள்)**

ரூபா பத்து இலட்சங்களில்

| வகை | 1982 | | 1983 | | 1984 | |
|---|---|---|---|---|---|---|
| | கடன் தொகை | மீள் நிதியிடப்பட்ட தொகை | கடன் தொகை | மீள் நிதியிடப்பட்ட தொகை | கடன் தொகை | மீள் நிதியிடப்பட்ட தொகை |
| வகை II ஏற்றுமதித்துறை ... | 97.7 | 97.7 | 43.7 | 36.5 | 113.0 | 79.1 |
| வகை IIIஉம் IVஉம் | | | | | | |
| (அ) வேளாண்மை ... | 1.0 | 1.0 | 27.8 | 19.2 | 0.1 | 0.1 |
| (ஆ) கைத்தொழில் ... | 65.0 | 53.4 | 9.7 | 7.0 | 98.2 | 49.1 |
| (இ) உணவு விடுதி ... | 75.3 | 72.5 | 13.2 | 8.6 | — | — |
| (ஈ) ஏனையவை ... | 8.3 | 5.0 | 5.8 | 3.5 | 2.2 | 1.3 |
| மொத்தம் | 247.3 | 229.6 | 100.2 | 74.8 | 213.5 | 129.6 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

### கொடுகடன் உத்தரவாதத் தொழிற்பாடுகள்

கொடுகடன் உத்தரவாதத் தொழிற்பாடுகளின் தொகுப்பொன்று அட்ட வணை 2.3 இல் காட்டப்பட்டுள்ளது.

## அட்டவணை 2.3

## மத்தியவங்கிக் கொடுகடன் உத்தரவாதத் திட்டங்கள் (1983–1984)

தொகை பத்து இலட்சம் ரூபாய்களில்

| விடயம் | சிறிய அளவுக் கைத்தொழில்கள் (சிஅகை) | | | | சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில்கள் (சிநகை–I) | | | | சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில்கள் (சிநகை–II) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1983 | | 1984 | | 1983 | | 1984 | | 1983 | | 1984 | |
| | எண்ணிக்கை | தொகை | எண்ணிக்கை | தொகை | எண்ணிக்கை | தொகை | எண்ணிக்கை | தொகை | எண்ணிக்கை | தொகை | எண்ணிக்கை | தொகை |
| வழங்கப்பட்ட கடன்கள் ... | 767 | 31.2 | 767 | 31.2 | 1,585 | 265.7 | 1,657 | 282.3 | 185(உ) | 43.9 | 372 | 141.0 |
| உத்தரவாதமளிக்கப்பட்ட கடன்கள் ... | 767 | 23.4(அ) | 767 | 23.4(அ) | 1,585 | 146.5 | 1,657 | 155.5 | 185(உ) | 25.0 | 372 | 77.4 |
| முழுமையாகப் பெறப்பட்ட கடன்கள் ... | 373 | வி.கி. | 441 | 11.4 | 193 | 8.6 | 476 | 28.6 | 4 | 0.4 | 11 | 1.3 |
| புறக்கீடு செய்யப்பட்ட காலங்கடந்த கடன்கள் ... | | வி.கி. | | | | | | | | | | |
| ... | 58 | | 61 | 3.6 | 29 | 7.7 | 45 | 11.4 | 11 | 0.8 | 15 | 2.4 |
| வெளிநிற்கும் கடன்கள் ... | 315 | 8.73(ஆ) | 229 | 6.09(ஆ) | 1,349 | 159.7(ஆ) | 1,081 | 151.5(ஆ) | 170 | 43.0(ஆ) | 346 | 116.5(ஆ) |
| (நிலுவைகளில் இருப்பவற்றில்) ... | 224 | வி.கி. | 173 | 5.0 | 697 | 103.3 | 619 | 91.9 | 45 | 5.4 | 58 | 11.5 |
| வெளிநிற்கும் உத்தரவாதங்கள் ... | 315 | 6.54(அ) | 229 | 4.57(அ) | 1,349 | 90.9(இ) | 1,081 | 86.6(இ) | 170 | 24.4(ஈ) | 346 | 65.2 (ஈ) |
| **அனுமதிக்கப்பட்ட தீர்க்கப்பட்ட கோரல்கள்** ... | | | | | | | | | | | | |
| (i) வெளிநிற்கும் கடன்கள் ... | 20 | 0.64 | 35 | 1.25 | 14 | 0.187 | 50 | 3.04 | — | — | — | — |
| (ii) அனுமதிக்கப்பட்ட பொறுப்புக்கள் ... | 20 | 0.41 | 35 | 0.75 | 14 | 0.112 | 50 | 1.82 | — | — | — | — |
| **நிலுவையிலுள்ள கோரல்கள்** ... | | | | | | | | | | | | |
| (i) வெளிநிற்கும் கடன்கள் ... | 29 | 1.66 | 23 | 1.41 | 89 | 12.8 | 88 | 16.3 | — | — | 3 | 0.22 |
| (ii) கோரப்பட்ட தொகை ... | 29 | 1.25 | 23 | 1.06 | 89 | 7.68 | 88 | 9.8 | — | — | 3 | 0.13 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

குறிப்புகள்: (அ) 75 சதவீதமான வெளிநிற்கும் கடன்கள்.

(ஆ) மீளப் பெறப்பட்ட தவணைப்பணம் தவிர்ந்த.

(இ) 60 வீதமான வெளிநிற்கும் கடன்கள் ஆகக் கூடியது ரூ. 400,000/-.

(ஈ) 60 வீதமான வெளிநிற்கும் கடன்கள் ஆகக்கூடியது ரூ. 800,000/-.

(உ) 1984-ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில் திட்டம் 1இற்கு மாற்றப்பட்ட 25 உத்தரவாதங்களையும் உள்ளடக்கும்.

**சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில் திட்டம்—I**

சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில் திட்டம் I இன் கீழ், பங்குபற்றும் கொடுகடன் நிறுவனங்களினூல் வழங்கப்பட்ட ரூ. 2,823 இலட்சங்கொண்ட கடன்களை உள்ளடக்கி மத்திய வங்கி 1,657 கொடுகடன் உத்தரவாதங்களை வழங்கியது. 1984 திசெம்பர் அளவில் 476 கடன்கள் முற்றுக மீளப் பெறப் பட்டன. செலுத்தப்படவேண்டிய 1,081 கடன்களில் 619 கடன்கள் நிலுவை யிலிருந்தன. அவ்வாறிருந்த போதிலும் இத்திட்டத்தின் கீழ் இது நாள்வரை மீளப் பெறப்பட்டவை ரூ. 1,308 இலட்சம் அல்லது வழங்கப்பட்ட மொத்தக் கடன்களில் 46 சதவீதத்தைக் கொண்டிருந்தன. மறுபுறத்தில் செலுத்தப்படாத 619 கடன்களினது வெளிநிற்கும் நிலுவை வழங்கப்பட்ட கடன்களில் 33 சத வீதத்திற்கு வகை கூறியது. 1984 திசெம்பர் வரையும் வங்கிகள் 138 கடன்கள் மீதான கொடுகடன் உத்தரவாதங்களை மீண்டும் பெற்றுக் கொண்டதுடன் 1984 திசெம்பரில் மத்தியவங்கி ரூ. 18.2 இலட்சங் கொண்ட 50 கோரிக்கைகளை அனுமதித்தது அல்லது தீர்ப்பனவு செய்தது. ரூ. 884,239 கொண்ட 5 கோரிக்கைகளை மத்திய வங்கி நிராகரித்தது.

கிடைக்கக்கூடிய தகவலின்படி சிறிய நடுத்தரக் கைத்தொழில் திட்டம் I இன் செயற்றிட்டங்களில் 139 செயற்றிட்டங்கள் கைவிடப்பட்டதாக அறிவிக்கப் பட்டுள்ளது. சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில் திட்டம் I இன் கடன்களின் கைத்தொழில்வாரியான பகுப்பொன்று அட்டவணை 2.4 இல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 2.4

**கைத்தொழில் வகைப்படியான கடன்களின் பகுப்பாய்வு சிறிய நடுத்தரக் கைத்தொழில் – திட்டம் I**

தொகை ஆயிரம் ரூபாய்களில்

| கைத்தொழில் | 1979 – 1984 | | | 1984 | | |
|---|---|---|---|---|---|---|
| | கடன்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை | உத்தரவாதமளிக்கப்பட்ட தொகை | கடன்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை | உத்தரவாதமளிக்கப்பட்ட தொகை |
| 1. நெல் குத்துதல் | 355 | 53,813 | 31,682 | 10 | 1,703 | 972 |
| 2. மென் பொறியியல் .. | 185 | 28,507 | 15,510 | 13 | 1,988 | 1,193 |
| 3. செங்கட்டிகளும் ஏனைய கட்டிடப் பொருட்களும் .. | 255 | 52,567 | 29,333 | 4 | 1,883 | 990 |
| 4. தைக்கப்பட்ட உடுப்புகள், பத்திக் கைத்தறி, விரிப்புக்கள் இன்னோரன்னவை .. | 140 | 21,744 | 11,367 | 2 | 830 | 418 |
| 5. இறப்பரும் இறப்பரை அடிப்படையாகக் கொண்ட பொருட்களும் .. | 31 | 9,116 | 4,590 | 1 | 250 | 150 |
| 6. காலணிகளும் ஏனைய தோல் உற்பத்திகளும் | 21 | 3,434 | 1,810 | — | — | — |
| 7. பனங்கட்டியும் கரும்பு உற்பத்திகளும் .. | 7 | 298 | 179 | 1 | 55 | 33 |
| 8. தளபாடங்களும் ஏனைய மர உற்பத்திகளும் | 87 | 9,255 | 5,248 | 5 | 743 | 446 |
| 9. தும்பும் தும்பை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளும் .. | 99 | 9,638 | 5,763 | 3 | 570 | 342 |
| 10. எழுது கருவிகளும் ஏனைய தாளுற்பத்திகளும் .. | 25 | 4,121 | 2,273 | 1 | 25 | 15 |
| 11. உணவும் குடி பானங்களும் .. | 86 | 17,532 | 8,901 | 8 | 910 | 546 |
| 12. பூச்சுக்கள், மினுக்கிகள், வண்ணமெழுகு.. இன்னோரன்னவை .. | 10 | 3,677 | 1,871 | — | — | — |
| 13. வானெலி ஈருருளிகள் என்பவற்றிற்கான உதிரிப்பாகங்கள் .. | 13 | 1,733 | 1,015 | 1 | 225 | 135 |
| 14. சவர்க்காரம் ஏனைய குளியலறைப் பொருட்கள் | 28 | 1,281 | 768 | — | — | — |
| 15. கைப்பணிப் பொருட்களும் பொம்மைகளும்.. | 20 | 808 | 485 | — | — | — |
| 16. சுருட்டுக்களும் பீடிகளும் .. | 6 | 48 | 29 | — | — | — |
| 17. மீன்பிடி வள்ளங்களும் உள்ளூர் கடற்றொழிலும் .. | 8 | 5,400 | 2,300 | 1 | 1,000 | 400 |
| 18. நகைகளும் இரத்தினக் கற்களும் .. | 12 | 806 | 484 | 1 | 150 | 90 |
| 19. விளையாட்டுப் பொருட்கள் .. | 3 | 94 | 56 | — | — | — |
| 20. வேளாண்மைக் கருவிகள் .. | 9 | 1,702 | 821 | — | — | — |
| 21. கண்ணுடியும் ஏனைய கண்ணுடி உற்பத்திகளும் | 7 | 1,166 | 700 | — | — | — |
| 22. பித்தளையும் அலுமினியப் பொருட்களும் .. | 49 | 7,784 | 3,930 | 2 | 1,070 | 448 |
| 23. மரம் அரிதல் .. | 49 | 10,051 | 6,008 | 2 | 875 | 510 |
| 24. அச்சகம் .. | 46 | 13,193 | 7,239 | 6 | 2,250 | 1,350 |
| 25. பல்வகை .. | 106 | 24,510 | 13,115 | 11 | 2,965 | 1,579 |
| மொத்தம் | 1,657 | 282,278 | 155,477 | 72 | 17,492 | 6,917 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

## சிறிய, நடுத்தரக் கைத்தொழில் கொடுகடன் உத்தரவாதத் திட்டம் II

ஐ. அ. டொலர்கள் 300 இலட்சங் கொண்ட கொடுகடன் தொடரில் பன்னாட்டு அபிவிருத்தி அமைப்புடன் இரண்டாவது சிறிய நடுத்தரக் கைத்தொழில் திட்டம் II 1982 இல் ஆரம்பிக்கப்பட்டது. 1983, 1984 காலப்பகுதியில் சிறிய நடுத்தரக் கைத்தொழில் நிதியங்களின் பயன்பாடு மிகவும் குறைவாயிருந்ததுடன் 1984 திசெம்பரில் நிதியத்தின் மொத்தம் (தேசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட கடன்களில் 80 சதவீதம்) ரூ. 1,333 இலட்சமாயிருந்தது.

சிறிய நடுத்தரக் கைத்தொழில் திட்டம் II இன் கீழ் மத்திய வங்கி ரூ. 1,410 இலட்சங் கொண்ட கடன்களை உள்ளடக்கிய 372 கொடுகடன் உத்தரவாதங்களை வழங்கியது. இவை பங்குபற்றும் கொடுகடன் நிறுவனங்களினால் வழங்கப்பட்டன. உத்தரவாதம் செய்யப்பட்ட கடன்களில் 58 கடன்கள் ஏற்கனவே நிலுவையாயிருந்தன. வங்கிகள் 3 கோரிக்கைகளைச் சமர்ப்பித்ததுடன் 1984 திசெம்பரில் அவை தீர்வை எதிர்பார்த்திருந்தன. சிறிய நடுத்தரக் கைத்தொழில் திட்டம் II இன் கீழ் வழங்கப்பட்ட கடன்களின் கைத்தொழில் வாரியான பகுப்பொன்று அட்டவணை 2.5 இல் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 2.5

### கைத்தொழில் வகைப்படியான கடன்களின் பகுப்பாய்வு
### சிறிய நடுத்தரக் கைத்தொழில் திட்டம் II

தொகை ஆயிரம் ரூபாய்களில்

| கைத்தொழில் | 1982 – 1984 | | | 1984 | | |
|---|---|---|---|---|---|---|
| | கடன்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை | உத்தரவாதமளிக்கப்பட்ட தொகை | கடன்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை | உத்தரவாதமளிக்கப்பட்ட தொகை |
| 1. உணவு பதப்படுத்தல் .. | 100 | 36,690 | 19,874 | 48 | 25,523 | 13,574 |
| 2. ஏனைய வேளாண்மைக் கைத்தொழில்கள் .. | 12 | 6,614 | 3,249 | 7 | 6,025 | 2,896 |
| 3. இறப்பர் உற்பத்திகள் .. | 15 | 7,897 | 3,968 | 12 | 7,297 | 3,608 |
| 4. உலோக உற்பத்திகள் .. | 54 | 11,936 | 7,207 | 21 | 7,514 | 4,564 |
| 5. கட்டடப் பொருட்கள் .. | 26 | 11,720 | 6,652 | 22 | 10,965 | 6,199 |
| 6. கட்டடவாக்க ஒப்பந்தம் .. | — | — | — | — | — | — |
| 7. மர உற்பத்திகள் .. | 38 | 9,742 | 5,845 | 21 | 5,211 | 3,126 |
| 8. ஆடைகள் .. | 29 | 13,525 | 7,098 | 16 | 7,764 | 4,042 |
| 9. புடவைகள் .. | 12 | 4,970 | 2,982 | 10 | 4,615 | 2,769 |
| 10. தொழிற்கூடத்திருத்தல் .. | 6 | 1,525 | 915 | 5 | 1,495 | 897 |
| 11. ஏனையவை .. | 80 | 36,365 | 19,663 | 50 | 26,541 | 14,268 |
| மொத்தம் .. | 372* | 140,984 | 77,453 | 212 | 102,950 | 55,943 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

* 1983இல் உத்தரவாதமளிக்கப்பட்ட ரூ. 59 இலட்சம் தொகை கொண்ட 25 கடன்கள் தவிர்ந்த மீதி 1984 இன் சிறிய நடுத்தரக் கைத்தொழில் Iஇற்கு மாற்றப்பட்டன.

## கிராமியக் கொடுகடன்

மத்திய வங்கி தொடர்ந்தும் 1984 இல் வங்கித் தொழில் அமைப்பின் கிராமியக் கொடுகடன் தொழிற்பாடுகளை வழிப்படுத்துவதிலும் ஆதரவளிப்பதிலும் முக்கிய பங்கினை வகித்தது. கிராமியக் கொடுகடன் தொடர்பான கொள்கைகளை வகுப்பதில் ஊக்கத்துடன் ஈடுபட்டது.

இவ்வாண்டில் வங்கி ஈடுபடுத்தப்பட்ட முக்கியமான நடவடிக்கையாகப் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளை நிறுவுவதற்கான முன்மொழிவு தொடர்பான சட்டத்தினைத் தயாரித்தல் விளங்கியது. முன்மொழிவின் சட்டவரைவுகள் ஆண்டின் நடுப்பகுதியில் தயாராகி அமைச்சரவையில் ஒப்புதலையும் பெற்றன. 1985 இன் முற்பகுதியில் இம் முன்மொழிவுகள் நாடாளுமன்றத்தின் ஒப்புதலுக்கு வருமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதனை நோக்கமாகக் கொண்டு இம் முன்மொழிவினை நடைமுறைப்படுத்துவதற்கான ஆரம்ப வேலைகளை வங்கி ஆரம்பித்தது.

இதேவேளை துணைக்குழுவொன்று ஆட்களைச் சேர்க்கும் கொள்கைகள், சம்பளங்கள் ஏனைய ஊதியங்கள் என்பன பற்றியும் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் அமைவிடம், இவ் வங்கிகளினால் மேற்கொள்ளப்படவேண்டிய கிராமியக் கடன்களுக்கான புதிய அணுகுமுறைகள் என்பன பற்றியும் பரிசீலனை செய்து அறிக்கை சமர்ப்பித்தது.

1984 இன் கிராமியக் கொடுகடன் மதியுரைச்சபை ஏழு தடவை கூடியது. கிராமியக் கொடுகடன் பற்றிய முக்கிய கொள்கை வகுக்கும் சபையாக இது விளங்குகின்றது. கிராமியத் துறையின் நீண்டகால சிக்கல்கள் தொடர்பான பல விடயங்கள் இக் கூட்டங்களில் ஆய்வுக்கு எடுக்கப்பட்டன. தற்போதுள்ள திட்டங்களுக்கு இதுவரை உட்படாதிருந்த தேவைகளையும் நிறைவேற்றக்கூடிய கொடுகடன் திட்டங்களைப் புகுத்துவதற்கான பல எடுத்துரைப்புக்களும் கவனத்திற்கெடுக்கப்பட்டன. பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியினால் பரிசீலனை செய்யப்பட்ட முக்கிய முன்மொழிவுகளில் சில கடற்றொழிற்றுறைக்கான கடன்களை மீள அட்டவணைப்படுத்தல், பொலநறுவை மாவட்டத்தில் உள்ள நெல் பயிரிடுவோருக்கான சுழல்வுக் கொடுகடன் திட்டத்தினைப் புகுத்துதல், ஈரவலயப் பிரதேசங்களில் பண்ணை இயந்திரங்கள், துணைக்கருவிகள் என்பனவற்றுக்கான மீள் நிதியிடல் வசதிகள் நலன்புரி, கூட்டுறவுக் கொடுகடன் சங்கங்கள் என்பவற்றினூடாக வேளாண்மைக் கொடுகடன்களை விரிவாக்குதல் என்பன விளங்கின. சில முன்மொழிவுகள் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள அதே வேளையில் ஏனைய சில கிட்டிய எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படும்.

அட்டவணை 2.6 மத்திய வங்கியின் நடுத்தர நீண்டகால கொடுகடன் நிதியத்தின் வகை I இன் கீழ் நடைமுறையிலிருக்கும் கொடுகடன் திட்டங்களின் செயலாற்றத்தினைக் காட்டுகின்றது. 1984 இல் இத்தகைய 27 திட்டங்கள் தொழிற்பட்டன. இவற்றில் ஐந்து இவ்வாண்டில் அறிமுகப்படுத்தப்பட்டவை.

## நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதியத்தின் வகை I இன்

| கொடுகடன் திட்டத்தின் பெயர் | மீள் நிதியிடல் ஒதுக்கீடுகள் ரூ.ப.இ. |
|---|---|
| **அ. 1984ஆம் ஆண்டின் தொடக்கத்தில் கொடுகடன் திட்டங்கள்** | |
| 1. ஒகிட் மரச் செய்கைக்காக இலங்கை வங்கி / வரையறுக்கப்பட்ட இலங்கைப் புகையிலைக்கூட்டு நிலையத்திற்கான கொடுகடன் திட்டம் ... | 4.50 |
| 2. தெங்கு வளமாக்கிக் கொடுகடன் திட்டம் ... ... | 45.20 |
| 3. கடற்றொழில் துறை வங்கி நிதியிடல் திட்டம் ... ... | 140.00 |
| 4. குள நீர்ப்பாசனம் நவீனமயப்படுத்தல் செயல்திட்டம் ... | 7.69 |
| 5. நுவரேலியா மாவட்டத்தில் பாற்பண்ணை அபிவிருத்திக்கான கடன் திட்டம் ... | 10.00 |
| 6. குருநாகல் மாவட்டத்திற்கான ஒருங்கிணைக்கப்பட்ட கிராம அபிவிருத்தி செயற்றிட்டத்திற்கான பண்ணைப் பொறித் தொகுதி கடன் திட்டம் ... | 40.00 |
| 7. சம்மாந்துறை தேர்தல் தொகுதியின் பாற்பண்ணை அபிவிருத்தி (முன்னோடி) செயற்றிட்டத்திற்கான கடன் திட்டம் ... ... | 0.12 |
| 8. மகாவலி செயற்றிட்டப் பகுதியில் குடியேறியவர்கள் இழுபொறிகளைக் கொள்வனவு செய்வதற்கு உதவும் கொடுகடன் திட்டம் ... ... | 55.00 |
| 9. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினால் நிறுவப்படும் வளமாக்கி களஞ்சியங்களுக்கான கொடுகடன் திட்டம் ... ... | 14.00 |
| 10. அபுதாபியினால் நிதியளிக்கப்பட்ட வடமேற்குக் கரை கடற்றொழில் அபிவிருத்தித் திட்டம். ... ... | 60.00 |
| 11. ஒகிட் பயிர்ச் செய்கைகளின் கொடுகடன் திட்டம் மக்கள் வங்கி / சர்வோதயம் / லக்மல்சல ... ... | 3.00 |
| 12. கடற்றொழில் கூட்டுறவு நிலையங்களுக்கான கொடுகடன் திட்டம் ... | 42.00 |
| 13. மாத்தளை, புத்தளம் மாவட்டங்களுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தித் திட்டம் ... ... ... | 54.23 |
| 14. காற்றுடி ஆலைகளுக்கு நிதியிடுவதற்கான திட்டம் ... ... | 2.56 |
| 15. மாத்தறை மாவட்டத்தில் இளைஞர் சுயதொழில் வாய்ப்புத் திட்டம் ... | 8.20 |
| 16. இறம்பொல, உடஅபறெக்க கிராம எற்புத் திட்டம் ... ... | — |
| 17. இலங்கை கிராமியக் கொடுகடன் செயற்றிட்டக் கடன் திட்டம் ... | 137.0 |
| 18. தேயிலை சிறு உடைமையாளர்களுக்கான வளமாக்கிக் கொடுகடன் திட்டம் ... | 7.50 |
| 19. இலங்கை கிராமிய கொடுகடன் திட்டத்திற்குள் அடங்காத மாவட்டங்களில் சுமை இழுக்கும் விலங்குகளைக் கொள்வனவு செய்வதற்கு நிதியிடுவதற்கான கொடுகடன் திட்டம்... | 5.60 |
| 20. அநுராதபுர மாவட்டத்தில் கிராம எற்பு சுய வேலைவாய்ப்பு நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் அடையாளம் காணப்பட்ட செயற்றிட்டங்களுக்கு நிதியிடலுக்கான கொடுகடன்திட்டம்... | 6.00 |
| 21. பயிரிடுகைக்கு முன்னுன விதை உருளைக் கிழங்கு சிறு களஞ்சியங்களின் கட்டடவாக்கத்திற்கான கொடுகடன் திட்டம் ... ... | 1.00 |
| 22. பதுளை மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராம அபிவிருத்தி செயற்றிட்டம் ... | 7.00 |
| **ஆ. 1984ஆம் ஆண்டுப் பகுதியில் ஒப்புதலளிக்கப்பட்ட கொடுகடன் திட்டங்கள்** ... | |
| 1. மாதிரி மீன்பிடிக்கான கொடுகடன் திட்டம் (கரையோர பாரவலை மீன்பிடி) ... | 5.00 |
| 2. பெல்வத்தை சீனிச் செயற்றிட்டத்தின்கீழ் கரும்பினை பயிரிடும் குடியிருப்பாளர்களுக்கான கொடுகடன் திட்டம் ... ... | 66.00 |
| 3. வவுனியா, மன்னார் மாவட்டங்களின் ஒருங்கிணைக்கப்பட்ட கிராமியஅபிவிருத்தி செயற்றிட்டம் ... ... ... | 32.00 |
| 4. செவனகல, இங்குரான, கந்தளாய் சீனி செயற்றிட்டத்தில் கரும்பினைப் பயிரிடும் சிறு வேளாண்மையாளர்களுக்கு உதவும் கொடுகடன் திட்டம் .. | 120.60 |
| 5. இறம்புக்கனைப் பிரதேசத்தில் இடைப் பயிர்ச் செய்கையுடன் மீள் நடுகை நிகழ்ச்சித் திட்டத்தை மேற்கொள்வதற்காக தெங்கு வளர்ப்போருக்கு உதவுவதற்கான இலங்கை —ஆசிய அபிவிருத்தி வங்கியின் தெங்கு அபிவிருத்தி செயற்றிட்ட கொடுகடன் திட்டம் | 8.00 |
| மொத்தம் | 882.20 |

அட்டவணை 2.6

## கீழ் மீள் நிதியிடுவதற்கு ஒப்புதலளிக்கப்பட்ட கடன் திட்டங்கள்

| 31.12.84இல் பயன்படுத்தப்பட்ட தொகை ரூ. ப. இ. | 31.12.84இல் பயன்படுத்தப்படாத தொகை ரூ. ப. இ. | செயற்றிட்டம் தொடங்கிய நாள் | ஒதுக்கீடுகளின் பங்கீட்டுக்கான காலப் பகுதி (ஆண்டுகள்) |
|---|---|---|---|
| 3.49 | 1.01 | 03.02.79 | 3 |
| 39.23 | 5.97 | 26.03.79 | 3 |
| 126.29 | 13.71 | 02.07.79 | 3 |
| 7.69 | — | 02.06.79 | 1 |
| 8.10 | 1.90 | 22.08.79 | 3 |
| 33.79 | 6.21 | 28.10.79 | 5 |
| — | 0.12 | 27.11.79 | 3 |
| 5.40 | 49.60 | 19.11.79 | 3 |
| 8.81 | 5.19 | 13.10.80 | 1 |
| — | 60.00 | 13.10.80 | 3 |
| 0.23 | 2.77 | 10.12.80 | 5 |
| — | 42.00 | 28.04.81 | 2 |
| 17.90 | 36.33 | 08.05.81 | 6 |
| 1.05 | 1.51 | 11.12.81 | 1 |
| 2.18 | 6.02 | 10.04.81 | — |
| — | — | 16.03.81 | — |
| 52.54 | 84.46 | 01.07.82 | 1 |
| 4.37 | 3.13 | 11.08.82 | 1 |
| 0.01 | 5.59 | 10.09.82 | 2 |
| 1.27 | 4.73 | 14.10.82 | 2 |
| — | 1.00 | 01.03.83 | 1 |
| 1.00 | 6.00 | 27.09.83 | 5 |
| — | 5.00 | 26.04.84 | 1 |
| — | 66.00 | 10.05.84 | 6 |
| — | 32.00 | 14.06.84 | 4 |
| — | 120.60 | 20.09.84 | 5 |
| — | 8.00 | 26.12.84 | 3 |
| 313.35 | 568.85 | — | — |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

முந்திய ஆண்டினைப் போன்று குறிப்பிடத்தக்க எண்ணிக்கை கொண்ட திட்டங்கள் கடன்களைப் பெறுவதில் குறைவாக முன்னேற்றத்தினைக் காட்டின. இத் திட்டங்களுக்கான மீள்நிதியிடல் வசதிகளுக்காக மத்திய வங்கி ரூ. 8,822 இலட்சத்தினை ஒதுக்கியது. இதில் ரூ. 3,133.3 இலட்சம் அல்லது 36 சதவீதம் மட்டுமே ஆண்டினிறுதியில் பயன்படுத்தப்பட்டிருந்தது. திருப்திகரமற்ற இச் செயலாற்றம் தனியே கடன் வழங்கும் வங்கிகளினால் மட்டும் ஏற்பட்டதல்ல. ஏனெனில் வர்த்தக வங்கிகளின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட பல காரணிகள் இத்திட்டங்களைப் பாதித்தன. மாவட்ட ஒன்றிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் கீழான நிதியிடலானது ஏனைய நிறைவேற்று முகவர்களினால் அடையப்பட்ட செயலாற்றத்திலேயே தங்கியுள்ளது. பெல்வத்தை செயற்றிட்டத்தின் கீழான கரும்புப் பயிர்ச்செய்கைக்கான நிதியிடல் இக்கூட்டு நிலையத்தின் ஏனைய ஆரம்ப வேலைகள் திட்டமிடப்பட்டவாறு பூர்த்தி செய்யப்படாமையினால் ஆரம்பிக்க முடியவில்லை. இவ்வாறே சில கொடுகடன் திட்டங்களில் தொழிற்பாட்டுக் குறைகள் காணப்பட்டமையினால் கொடுகடன் வழங்குவது கடினமாகவிருந்தது. பாரம் இழுக்கும் விலங்குகள், நான்கு சில்லு இழுபொறிகள் என்பவற்றுக்கான கேள்வி குறைவாக இருந்தமை இந்நோக்கங்களுக்கான கொடுகடன் வழங்குவதனைத் தொடர்ந்து திருப்திகரமாக மேற்கொள்ள முடியாதிருந்தமைக்கு முக்கிய பொறுப்பு வகித்தது.

மறுபுறம் உடனடிக் கேள்வி காணப்பட்ட இருசில்லு இழுபொறிகள் போன்ற சில கடன் திட்டங்களின் அபிவிருத்தி ஆய்வுக்குரிய ஆண்டில் திருப்திகரமாகக் காணப்பட்டது. தேவையான உள்ளமைப்புக்கள், தேர்ச்சிபெற்ற மனித வலு, வர்த்தக வங்கிகளின் அலுவலர்களின் ஊக்கம் என்பன போதாதிருந்தமை 1984 இன் பல கொடுகடன் திட்டங்களில் ஏற்பட்ட மெதுவான அபிவிருத்திக்கு முக்கிய காரணிகளாக விளங்கின.

மத்திய வங்கியினை இணைப்பு முகவராகக் கொண்டதும் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் உதவப்பட்ட இலங்கை கிராமிய கொடுகடன், செயற்றிட்டக் கடன் வழங்குவதில் திருப்திகரமான செயற்பாட்டினைக் கொண்டிருந்தது. செயற்றிட்டத்தின் வேளாண்மை வலுக் கூறினைப் பொறுத்தவரை இலக்குவைக்கப்பட்ட தொகையான 1,000 இருசில்லு இழுபொறிகளை வேளாண்மையாளர்களுக்கு விற்றதன் பின்பு இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஆகிய இரு நிறைவேற்று முகவர்களும் மேலும் 1,000 இருசில்லு இழுபொறிகளைக் கொள்வனவு செய்வதற்காக 1984 இல் இலங்கை அரச வர்த்தக (இறக்குமதி)க் கூட்டுத்தாபனத்துடன் இரண்டாவது ஒப்பந்தத்தைச் செய்து கொண்டன. நான்கு சில்லு இழுபொறிகளை விற்பனை செய்வதில் உள்ள சிக்கலானது நாடு முழுவதனையும் உள்ளடக்கும் வகையில் தொழிற்படும் பிரதேசம் விரிவுபடுத்தப்பட்டமையினால் ஓரளவிற்குத் தீர்க்கப்பட்டது. நீர்ப்பம்புகள், வலுத் தெளிகருவிகள் என்பவற்றின் விற்பனை இவ்வாண்டில் நல்ல செயலாற்றத்தைக் கொண்டிருந்தது. நீர்ப்பாசனக் கூறினைப் பொறுத்தவரை நிறைவேற்று முகவரான நீர்வளச்சபை தேவையான துணைக்கருவிகளைக் கொள்வனவு செய்வதில் சிறு முன்னேற்றத்தைக் கொண்டிருந்தது. கடன் முடிவடையும் நாளான 1985 திசெம்பர் 31 இற்கு முன்னர் செயற்றிட்டத்தினைப் பூர்த்தி செய்வதனை உறுதிப்படுத்தும் பொருட்டு 1984 மேயில் இலங்கையில் இருந்த ஆசிய அபிவிருத்தி வங்கிக் குழு கடனின் மீள ஒதுக்கினை விதந்துரைத்தது.

1984 இல் மத்திய வங்கி அம்பாறை, புத்தளம், மாத்தளை, நுவரெலியா, பதுளை, கண்டி, களுத்துறை ஆகிய மாவட்டங்களிலுள்ள 18 வர்த்தக வங்கிக் கிளைகளின் (எட்டு மக்கள் வங்கிக் கிளைகளும் பத்து இலங்கை வங்கிக் கிளைகளும்) வேளாண்மைக் கடன் பத்திரங்களையும் மூன்று கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் வேலைகளையும் பரிசீலனை செய்துமுடித்தது. பூர்த்திசெய்யப்பட்ட பரிசீலனை அறிக்கைகள் அவற்றின் தொடர்பான கிளைகளுக்கு அவற்றின் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான விதந்துரைப்புக்களுடன் மத்திய வங்கியுடனான இணக்க அறிக்கை ஒன்றை வேண்டியும் அனுப்பப்பட்டன.

## கிராமிய வங்கித்தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரி

கிராமிய வங்கித்தொழில், அலுவலர் பயிற்சிக் கல்லூரி வர்த்தக வங்கிகள், ஏனைய நிதி நிறுவனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் என்பவற்றிலிருந்தான 636 நடுத்தர, மூத்ததர மட்டத்திலான முகாமை ஆளணியினருக்காக இருபத்தாறு பயிற்சி நெறிகளையும், ஆய்வரங்குகளையும் தொழிற்கூடங்களையும் ஒழுங்குசெய்து நடத்தியது. ''கொடுகடன் முகாமைத்துவம்'' மீதான செயல் முறைத்திட்டம் கொழும்பு கிறின்லேஸ் வங்கியின் இணைந்த ஆதரவுடன் இந்தியாவிலுள்ள பம்பாய் கிறின்லேஸ் பன்னாட்டுப் பயிற்சி நிறுவன வளாகத்தினால் நடாத்தப்பட்டது. ''அபிவிருத்தியடையும் முகாமைத் திறன்கள்'' மீதான நெறி கொழும்பு சிற்றி வங்கியுடன் இணைந்து நடாத்தப்பட்டது.

1984 இல் கல்லூரியினால் வழங்கப்பட்ட பயிற்சி கொடுகடன் முகாமைத்துவம், செயற்றிட்டங்களை அடையாளம் காணலும் மதிப்பிடலும், வர்த்தக வங்கித் தொழில், முகாமைத்துவ அபிவிருத்தி, வங்கித்தொழிலில் கணனி மயமாக்கல், குடிசைக் கைத்தொழில்கள், புள்ளிவிபரவியல், கணக்கியல் ஆகிய விடயங்கள் தொடர்பானதாக விளங்கியது. கிராமிய வங்கித் தொழிலும் கொடுகடனிலும் அலுவலர்களைப் பயிற்றுவிப்பதே பயிற்சியில் முன்னுரிமை பெறுகின்றது. நிகழ்ச்சித் திட்டங்கள் வெளியிடங்களிலும் நடாத்தப்பட்டன.

1984 செத்தெம்பரில் கல்லூரி தனது தொழிற்பாட்டின் மூன்றாவது ஆண்டினை நிறைவு செய்தது. மூன்றாவது ஆண்டு நிறைவு விழாச் சொற்பொழிவு ''மகாவலிப் பிரதேசங்களிலான கொடுகடன்'' என்ற தலைப்பில் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபை உறுப்பினரான திரு. என். ஜி. பி. பண்டிதரத்ன அவர்களால் ஆற்றப்பட்டது.

## ஊழியர் சேம நிதியம்

மத்திய வங்கியின் நாணயச் சபைக்கு ஊழியர் சேம நிதியத்தின் உதவு தொகைகளையும் மேலதிகக் கட்டணங்களையும், பண முதலீடுகளிலிருந்தான வருமானத்தையும் பெறுவதற்கும் ஊழியர் சேம நிதியத்தின் பதிவு செய்யப்பட்ட தொழில் வழங்குநர் தனிப்பட்ட உறுப்பினர் ஆகியோருக்கான சரியான கணக்குகளைப் பேணுவதற்கும், ஊழியர் சேம நிதிச் சட்டத்தின் ஒழுங்குவிதிகளுக்கமைய உறுப்பினர்களின் நன்மைகளை மீளச் செலுத்துவதற்கும் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்நடவடிக்கைகள் சட்டத்தின் ஒழுங்கு விதிகளின் நிருவாகம், நடைமுறைப்படுத்தல் என்பவற்றை மேற்கொள்ளும் தொழிற்றிணைக்களத்தின் ஊழியர் சேம நிதியப் பிரிவின் நெருங்கிய கூட்டுத் தொழிற்பாட்டுடன் வங்கியின் ஊழியர் சேமநிதியத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன. 1984 இல் இதன் தொழிற்பாடுகள் பற்றிய சுருக்கமான குறிப்புக் கீழே தரப்பட்டுள்ளது.

**உதவு தொகைகள்**

1984 ஆம் ஆண்டில் இந்நிதியத்தினுல் பெறப்பட்ட உதவுதொகைகள் 1983 இன் ரூ. 12,017 இலட்சத்திற்கு எதிராக ரூ. 15,834 இலட்சமாக விளங்கியது. இது முந்திய ஆண்டில் பெறப்பட்ட உதவுதொகைகளின் மட்டத்தைவிட ரூ. 3,817 இலட்சம் அல்லது 31.8 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பிரதிபலிக்கின்றன. 1978 தொடக்கம் பதிவு செய்யப்பட்டதில் இதுவே ஆகக் கூடிய சதவீத அதிகரிப்பாகும்.

**உறுப்பினர்களின் நிலுவைகள்**

மீளாய்விற்குரிய ஆண்டிற்கான வட்டி ஒதுக்கப்படுமுன்னர் உறுப்பினரின் நிலுவைகள் 1984 திசெம்பர் 31 இல் ரூ. 103,928 இலட்சமாக விளங்கின. இது 1983 இன் மட்டத்தினைவிட ரூ. 20,509 இலட்சம் அல்லது 24.6 சதவீதம் கூடுதலானதாகும்.

**முதலீடுகள்**

அரசின் பிணைகள், திறைசேரி உண்டியல்கள், நகர அபிவிருத்தி மேலாண்மைச் சபையினுலும் அரச ஈட்டுமுதலீட்டு வங்கியினுலும் வழங்கப்பட்ட தொகுதிக் கடன் முறிகள் என்பவற்றில் நிதியம் முதலீடு செய்த தொகை 1983 இன் ரூ. 23,890 இலட்சத்திற்கெதிராக ஆய்வுக்குரிய ஆண்டில் ரூ. 58,956 இலட்சம் ஆக விளங்கியது. இது 1983 இன் மட்டத்தினைவிட ரூ. 35,066 இலட்சம் கூடுதலானதாகும். ஆய்வுக்குரிய ஆண்டில் செய்யப்பட்ட மொத்த முதலீடுகள் முந்திய முதலீடுகளினதும் திறைசேரி உண்டியல்களினதும் முதிர்ச்சியினுல் பெறப்பட்ட தொகையான ரூ. 37,177 இலட்சத்தினையும் உள்ளடக்கும். அரசின் பிணைகளில் மட்டும் முதலிடப்பட்ட மொத்தத் தொகை ரூ. 31,523 இலட்சமாக அமைந்து 1984 இல் இலங்கை அரசினுல் வழங்கப்பட்ட மொத்தப் பிணைகளில் 72.6 சதவீதத்தினைப் பிரதிபலித்தது. இவ்வாண்டில் வெவ்வேறு கால இடைவெளியில் திறைசேரி உண்டியல்களில் முதலிடப்பட்ட மொத்தத் தொகை ரூ. 24,729 இலட்சமாக விளங்கியது. ஆய்வுக்குரிய ஆண்டின் முடிவில் நிதியம் திறைசேரி உண்டியல்கள் எதனையும் வைத்திருக்கவில்லை. ஏனெனில் அவை முன்பே கழிவு செய்யப்பட்டு விட்டன. 1984 திசெம்பர் 31 இல் நிதியத்தினுல் வைத்திருக்கப்பட்ட மொத்த முதலீடுகள் ரூ. 111,347 இலட்சமாக விளங்கின. இது 1983 இன் மட்டத்தினைவிட ரூ. 21,780 இலட்சம் அதிகமானதாகும்.

**முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வருமானம்**

நிதியத்தின் முதலீடுகளிலிருந்து கிடைத்த வருமானம் 1983 இன் ரூ. 9,234 இலட்சத்திற்கெதிராக 1984 இல் ரூ. 11,939 இலட்சமாக அமைந்து ரூ. 2,705 இலட்சம் அல்லது 29.3 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது. இவ்வதிகரிப்பு முக்கியமாக நிதியத்தினுல் பெறப்பட்ட உதவுதொகைகளின் அதிகரித்த அளவிலான முதலீடு, கடந்தகால முதலீடுகளிலிருந்து ஆய்வுக்குரிய ஆண்டில் பெறப்பட்ட வருமானத்தினை மீள முதலிட்டமை என்பவற்ருல் ஏற்பட்டதாகும்.

**மீளளிப்புக்கள்**

ஊழியர் சேம நிதிய நன்மைகளின் மீளளிப்பு வடிவில் செலுத்தப்பட்ட மொத்தத் தொகை 1983 இன் ரூ. 3,836 இலட்சத்திற்கெதிராக 1984 இல் ரூ. 5,516 இலட்சமாக விளங்கியது. இது ரூ. 1,680 இலட்சம் அல்லது 43.8

சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்கிறது. ஆய்வுக்குரிய ஆண்டில் திணைக்களத்தில் 75,281 கோரல்கள் நன்மைகளின் மீளளிப்பிற்காகப் பெறப்பட்டன. இது இந்திய வம்சாவழியினரின் நாடு திரும்புவோரிலிருந்து 8,314 இனையும் மருத்துவ அடிப் படையிலான 40,278 இனையும் உள்ளடக்கியிருந்தது. இவ்வாண்டில் செலுத்தப் பட்ட கோரல்களின் மொத்த எண்ணிக்கை 65,198 ஆகும்.

### உறுப்பினர்களின் நிலுவைகள் மீதாண வட்டி

ஒவ்வொரு ஆண்டு முடிவிலும் உள்ள உறுப்பினர்களின் நிலுவைகள்மீது நிதியத்தின் முதலீடு செய்யப்பட்ட பணங்களிலிருந்து கிடைக்கும் வருமானத்தி லிருந்து வட்டி செலுத்தும்படி ஊழியர் சேம நிதியம் வேண்டப்படுகின்றது. 1983 இறுதியில் உள்ளவாறுன உறுப்பினர்களின் நிலுவைகள் மீது செலுத்தப்பட வேண்டிய வட்டி வீதம் 1984 இல் 12 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டது. ஆண்டு முடிவில் உறுப்பினரின் வரவில் நிற்கும் நிலுவைகள்மீது வட்டி செலுத்தப் பட்டு அதன் பின்னர் மொத்தத் தொகையில் வட்டி ஒன்று சேரும். இது தவிர ஆண்டின் முடிவில் உறுப்பினரின் வரவில் நிற்கும் நிலுவையின்மீது உறுப்பினரின் வரவிற்கு நிதியத்தினுல் எந்த நாளில் அப்பகுதி நிலுவை (இது நடைமுறை ஆண்டின் உதவு தொகைகளைப் பிரதிபலிக்கும்) பெறப்பட்டது என்பதனைப் பொருட்படுத்தாது ஆண்டு முழுவதற்கும் வட்டி செலுத்தப்படும். உதாரணமாக திசெம்பர் மாதத்தில் பெறப்பட்ட உதவுதொகை அவ்வாண்டின் சனவரி மாதத் தில் பெறப்பட்ட உதவு தொகையைப்போன்று முழு ஆண்டுக்குமான வட்டியைப் பெறும். எனவே வட்டி வீதத்தின் செயற்தாக்கமானது 13.4 சதவீதமாக அமையும்.

நிதியத்தின் தொழிற்பாட்டைப் பற்றிய ஒப்பிடத்தக்க கூற்று மீதான தற்போது கிடைக்கக் கூடியதாகவுள்ள தரவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

அட்டவணை 2.7

ஊழியர் சேமநிதியப் புள்ளி விபரங்கள் 1983–1984

தொகை ரூபா பத்து இலட்சங்களில்

| | | 1983 | 1984 |
|---|---|---|---|
| 1. | பெறப்பட்ட உதவு தொகைகள் ... | 1,201.7 (அ) | 1,583.4 (அ) |
| 2. | முதலீடுகள் ... | 2,389.0 (ஆ) | 5,895.6 (ஆ) |
| 3. | முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வருமானம் ... | 923.4 | 1,193.9 |
| 4. | மீளளிப்புக் கொடுப்பனவுகள் ... | 383.6 | 551.6 |
| 5. | மீளளிப்புக்களின் எண்ணிக்கை ... | 55,082 | 65,198 |
| 6. | வட்டி வீதம் (%) ... | 12.0 | 12.5 (இ) |
| 7. | உறுப்பினர் நிலுவைகள் மீதான வட்டி ஒதுக்கு ... | 1,001.0 | 1,299.0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) தொங்கற் கணக்கில் வரவு வைக்கப்பட்ட உதவு தொகைகள் நீங்கலாக.

(ஆ) அரச பிணைகளில் மீள் முதலீடு செய்யப்பட்ட முதிர்ச்சித் தொகைகளையும் குறுங்கால திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்ட பணத்தையும் உள்ளடக்கும்.

(இ) எடுத்துரைக்கப்பட்டது ஆனல் இன்னும் ஒப்புதல் பெறப்படவேண்டியது.

## செலாவணிக் கட்டுப்பாடு

செலாவணிக் கட்டுப்பாட்டினை நடைமுறைப்படுத்துவதில் அரசின் முகவராக வங்கி தொடர்ந்தும் தொழிற்பட்டது. மீளாய்வின் கீழான ஆண்டில் நடைமுறைக்கு வந்த செலாவணிக் கட்டுப்பாட்டு நடைமுறைகளின் முக்கிய மாற்றங்கள் கீழே எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

### 1. கப்பற்றுறை, விமானத்துறை வெளிநாட்டுக் கணக்குகள்

*1984 யூன் 1* இலிருந்து கப்பற்றுறை, விமானத்துறை வெளிநாட்டுக் கணக்குகளை ஆரம்பிப்பதற்குச் செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் ஒப்புதல் அவசியமென்று அறிவிக்கப்பட்டது.

### 2. ஏற்றுமதிகள்

(i) ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கான கொடுப்பனவு ஏற்றுமதி செய்யப்பட்ட நாளிலிருந்து ஆறு மாதங்களுக்குப் பிந்தாமல் பெறப்படவேண்டுமென்ற வேண்டுகோள் *1984* ஏப்பிரல் *9* இலிருந்து பின்வருமாறு திருத்தியமைக்கப்பட்டது:—

(அ) கொடுகடன் பத்திரங்கள் (உடன் நியதிகளின்)—முதிர்ச்சியடையும் நாளிலிருந்து *21* நாட்களுக்குப் பிந்தாமல்.

(ஆ) கொடுகடன் பத்திரங்கள் (பிற்போடப்பட்ட கொடுப்பனவு)—முதிர்ச்சியடையும் நாளிலிருந்து *21* நாட்களுக்குப் பிந்தாமல்.

(இ) கொடுப்பனவின் மீதான ஆவணங்கள் (கொடுகடன் பத்திரங்கள் இல்லாத உடன் உண்டியல்கள்)—ஆவணங்களைச் சமர்ப்பித்த நாளிலிருந்து *21* நாட்களுக்குப் பிந்தாமல்.

(ஈ) வட்டியுடைய உண்டியல்கள் (ஏற்றுக்கொள்வதன் மீதான ஆவணங்கள்) கப்பலேற்றும் நாளிலிருந்து *180* நாட்களுக்குப் பிந்தாமல்.

மேற்கூறப்பட்ட எல்லையைவிட ஏதாவது காலக்கெடு தேவைப்படின் செலாவணிக் கட்டுப்பாட்டாளரின்முன் ஒப்புதல் தேவையாகும்.

(ii) ரூ. *500,000* பெறுமதிக்கு மேற்பட்ட ஏற்றுமதிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர் முன்மாற்று வெளிநாட்டுச் செலாவணிப் பெறுகைகளைக் கொள்வனவு செய்யுமாறு *1984* மே *2* இலிருந்து வேண்டப்பட்டனர்.

(iii) மெக்சிக்கோ தவிர்ந்த ஏனைய நாடுகளுக்குக் கறுவாப்பட்டை ஏற்றுமதி செய்யும்போது இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளரிடமிருந்து ஏற்றுமதி உரிமம் பெறப்பட வேண்டுமென்ற தேவை 1984 யூன் 6 இலிருந்து நீக்கப்பட்டது.

(iv) *1984* யூன் *7* தொடக்கம் விலையுயர்ந்த கற்கள், ஆபரணங்கள் என்பவற்றின் வர்த்தக ரீதியான மாதிரிகளை அவற்றின் பெறுமதி ரூ. *2,500* இற்கு மேற்படாவிடின் அதனை ஏற்றுமதி செய்வதற்கு முதன்மைச் சுங்கச் சேகரிப்பாளர் தனது விருப்பின்பேரில் இலங்கையருக்கு அனுமதி வழங்கலாமென அறிவிக்கப்பட்டார்.

3. இறக்குமதிகள்

(i) புதினப் பத்திரிகைகளை இறக்குமதி செய்வதற்குக் கொடுகடன் பத்திரங்களை ஆரம்பிப்பதற்கு இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளரிடமிருந்து இறக்குமதி உரிமத்தைப் பெறவேண்டுமென்ற தேவை 1984 சனவரி 10 இலிருந்து நீக்கப்பட்டது.

(ii) கோப்பி இறக்குமதி செய்வதற்காகக் கொடுகடன் பத்திரங்களை ஆரம்பிப்பதற்கு வர்த்தகப் பணிப்பாளரின் முன் ஒப்புதலைப் பெற வேண்டுமென்ற தேவை 1984 மாச்சு 23 இல் நீக்கப்பட்டது. இத் தேவை மீண்டும் 1984 செத்தெம்பர் 20 இல் புகுத்தப்பட்டது.

(iii) இதுவரை எல்லா இறக்குமதிகளுக்கும் அனுமதிக்கப்பட்ட செலாவணி முன்மாற்றின் விற்பனை 1984 மே 2 இலிருந்து உணவும், உணவுப் பொருட்களும், மூலப்பொருட்கள், கூறுகளும் இடைத்தரப் பொருட்களும், மருந்துகளும், மருந்தாக்கற் பொருட்களும், புத்தகங்களும் சஞ்சிகைகளும், மூலதனப் பொருட்களும் அவற்றின் பகுதிகளும் ஆகியவற்றுக்கு மட்டுப்படுத்தப்பட்டது.

4. வதிவோர் நடைமுறைக் கணக்குகள்

அரசு, அல்லது தனியார் அமைப்புக்களுடன் ஒப்பந்தங்களில் ஈடுபட்டுள்ள வெளிநாட்டுக் கூட்டு நிலையங்கள் அல்லது தனிப்பட்டோரினால் பேணப்படும் வதிவோர் நடைமுறைக் கணக்குகளுக்கான பற்றுக்கள் பின்வருவன தொடர்பானதாயின் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் உசாத் துணையின்றிச் செய்யப்படலாமென அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

(i) வெளிநாட்டுக் கூட்டு நிலையங்கள்

அரசு அல்லது தனியார் அமைப்புக்களுடனான ஒப்பந்தங்களின் நியதிகளின் படியான காரணமாக உள்நாட்டில் செலுத்தப்படும் அல்லது வெளிமுக பணவனுப்பல்கள் அவை வரி போன்ற உள்நாட்டுப் பொறுப்புக்கள் தீர்க்கப்படும் பட்சத்தில்.

(ii) வெளிநாட்டு அலுவலர்கள்

வெளிநாட்டிலுள்ள தங்கியிருப்போரைப் பேணுதல் தொடர்பான மட்டுமான உள்நாட்டுச் சொத்துக்களும், வெளிமுக பணவனுப்பல்களும் அவை வரிகள் போன்ற ஏதாவது உள்நாட்டுப் பொறுப்புக்களை அது தீர்க்கும் பட்சத்தில் ஏனைய எல்லாப் பற்றுக்களும் செலாவணிக் கட்டுப்பாட்டு ஒப்புதலைப் பெறல் வேண்டும்.

5. வதிவற்றோர் ரூபாக் கணக்குகள்

வெளிநாட்டுச் செலாவணி இல்லங்களிலிருந்தான வதிவற்றோர் கணக்குகளைத் திறப்பதற்கான விண்ணப்பங்கள் வெளிநாட்டிலுள்ள பிரசித்த வங்கியொன்றினால் பத்து இலட்சம் ரூபாய்க்கு உத்தரவாதமளிக்கப்படுவதன் மூலம் செய்யப்பட வேண்டுமென அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களுக்கு அறிவிக்கப்பட்டது. வதிவற்றோர் கணக்குகளை வதிவற்றோர் தடுப்புக் கணக்காக மாற்றுவதற்குச் செலாவணிக் கட்டுப்பாட்டு ஒப்புதல் தேவைப்படுமெனவும் கருதப்பட்டது.

## பொதுப்படுகடன்

நாணயவிதிச் சட்டத்தின் 113 ஆம் பிரிவின் நியதிகளின்படி மத்திய வங்கி தொடர்ந்தும் அரசின் சார்பில் பொதுப்படுகடனை முகாமைப்படுத்தியது. இதன் கீழான முக்கிய தொழிற்பாடுகளாக ரூபாக் கடன்களை மிதக்கவிடல், திறைசேரி உண்டியல்களையும் வரி ஒதுக்குச் சான்றிதழ்களையும் வழங்குதல்,வெளிநாட்டுக்கடன் பெறுகைகளைப் பதிவு செய்தல், உள்நாட்டு வெளிநாட்டுக் கடன்களை மீளச் செலுத்துதல், வட்டி, கடப்பாட்டுக் கட்டணங்களைச் செலுத்துதல் என்பன விளங்கின. 1984 ஆம் ஆண்டுக் காலத்தில் 1983 ஆம் ஆண்டின் சிறப்பு நியதிகள் சட்ட எண் 52 இன் நியதிகளின்படி ரூ. 43,443 இலட்சம் தொகையினைக் கொண்ட ரூபாக் கடன்கள் மிதக்க விடப்பட்டன. இவ்வாண்டில் திறைசேரி உண்டியல்களின் வழங்கல் 1983 இன் இறுதியில் நிலவிய மட்டத்தினைவிட ரூ. 25,400 இலட்சம் கொண்ட வீழ்ச்சியை ஏற்படுத்தின. இவ்வாண்டில் பொதுப்படுகடன் கண்காணிப்பாளர் தொடர்ந்தும் இணைந்த முதலீட்டு நிதியத்தினை முகாமைப்படுத்தினர். எனினும் ரூபாக் கடன்களை மீட்பதற்கான அரசின் உதவுதொகைகள் 1984 சனவரியிலிருந்து நிறுத்தப்பட்டன. 1984 இல் பொதுப் படுகடன் மீதான மொத்த வட்டி ரூ. 72,964 இலட்சமாகவும் கடன்களின் மீளக் கொடுப்பனவு கடன்கரைப்பு நிதியங்களின் மூலங்களிலிருந்து செலுத்தப்பட்ட மீளக் கொடுப்பனவையும் உள்ளடக்கி ரூ. 46,320 இலட்சமாகவும் விளங்கியது. இத்துடன் பொதுப் படுகடனின் கண்காணிப்பாளர் நகர அபிவிருத்தி மேலாண்மைச் சபை, அரச ஈட்டு முதலீட்டு வங்கி என்பவற்றின்பேரில் தொகுதிக்கடன் முறிகளை மிதக்கவிட்டு, மீளச் செலுத்தியதுடன் மத்திய வங்கியின் பிணைகளினையும் வழங்கினர். இவற்றின் விபரங்கள் இப்பகுதியில் வேறோரிடத்தில் தரப்பட்டுள்ளன.

## பிரதேச அலுவலகம் - மாத்தறை

பிரதேச அலுவலகத்தினை எண் 35, அநகாரிக தர்மபால மாவத்தை, மாத்தறையில் உள்ள தனது புதிய பணிமனைக்கு மாற்றியதுடன் 1984 ஆம் ஆண்டு ஆரம்பித்தது. இவ்வாண்டில் வங்கிக் கடன்களையும், அதனைத் தொடர்ந்த பணிகளையும் வழங்கியதன்மூலம் சிறு அளவிலான பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்குப் பெருமளவில் தொடர்ந்தும் பணிபுரிந்தது. சுய வேலைவாய்ப்பு, கிராமிய ஆக்கம், நெற்பயிர்ச்செய்கை மீள்நிதியிடல் கடன் திட்டங்கள் என்பவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. 1984 இல் பல்வேறு மீள்நிதியிடல் திட்டங்களின்கீழ் வங்கிக் கடன்களை நாடும் விண்ணப்பதாரர்களுக்கு செயற்றிட்டம் சார்ந்த பயிற்சி நெறித்தொடர் நடாத்தப்பட்டது. வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, சிறு கைத்தொழில் என்பவற்றில் 446 பேருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டதைவிட மாத்தறை, அம்பாந்தோட்டை, மொனராகலை மாவட்டங்களில் நெல், உயர்நில விவசாயிகளின் நன்மை கருதிப் பெரும் தொகையான கூட்டங்களையும் கலந்துரையாடல்களையும் நடாத்தியது.

பயிற்சித் திட்டங்களை நடாத்துவதில் கைத்தொழில் அபிவிருத்திச் சபை வேளாண்மைத் திணைக்களம், விலங்கு உற்பத்தி, நலத்துறைத் திணைக்களம், வேளாண்மை அபிவிருத்தி மேலாண்மைச் சபை என்பன தமது உதவியை வழங்கின.

1984 முடிவில் உள்ளவாறுன இவ்வலுவலகம் சம்பந்தப்பட்ட மீள் நிதியிடல் கொடுகடன் தொழிற்பாடுகளின் புள்ளிவிபரத் தொகுப்பு கீழே தரப்பட்டுள்ளது.

அட்டவணை 2.8

## மீள் நிதியிடல் கொடுகடன் தொழிற்பாடுகள்
## பிரதேச அலுவலகம் — மாத்தறை
## புள்ளிவிபரவியல் தொகுப்பு — 1984 இறுதியில் உள்ளவாறு

| திட்டங்கள் | நன்மையடைவோர் எண்ணிக்கை | கடன் தொகை (ரூபா) |
|---|---|---|
| 1. மீள் நிதியிடல் கொடுகடன் திட்டத்தின்கீழ் 500 இளைஞர் களுக்கு சுயதொழில் வாய்ப்பு ... | 416 | 3,724,770 |
| 2. கிராம ஏற்பு மீள் நிதியிடல் கொடுகடன் திட்டம் ... | 66 | 249,285 |
| 3. அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத் தின்கீழ் மாதிரி 'யாயா' நெற்பயிர்ச் செய்கைக்கான கடன்கள் ... | 962 | 2,200,000 |
| 4. அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட் டத்தின்கீழ் வரண்ட நில வேளாண்மைக்கான கடன்கள் ... | 220 | 880,000 |
| 5. தேயிலை வளமாக்கி மீள் நிதியிடல் கடன் திட்டம் ... | 135 | 1,088,924 |
| 6. தெங்கு வளமாக்கி மீள் நிதியிடல் கடன் திட்டம் ... | 140 | 766,086 |
| மொத்தம் ... | 1,939 | 8,909,065 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

மேலேயுள்ள புள்ளிவிபரத் தொகுப்பிலிருந்து 1984 இறுதியில் வங்கித் தொழில் முறையினூடாக மீள்நிதியிடல் திட்டங்களின் கீழ் திரட்டப்பட்ட கொடுகடன் வசதிகளின் மொத்தத் தொகை ரூ. 8,909,065 அளவாக அமைந்து ஏறக்குறைய 2,000 பேர் நன்மையடைந்தனர்.

அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின்கீழான வேளாண்மைக் கடன்கள் 1982 இல் மாதிரி ''யாயா'' நெல் பயிர்ச்செய்கை கடன் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டதுடன் முற்றுகத் தொழிற்படாது விட்டன. கடன் செலுத்தத் தவறியோர் மிகக் கூடுதலாக விளங்கியதன் விளைவாக வங்கியாளர்களும் வேளாண்மையாளர்களும் அதிருப்தியடைந்தனர். வேளாண்மையாளர்களினதும் அலுவலர்களினதும் நன்மை கருதி கிராமிய மட்டத்தில் தொடர்பான கூட்டங்கள் நடாத்தப்பட்டதன் மூலம் பேச்சுவார்த்தைகள் மீளமைக்கப்பட்டன. பல கிராமங்களில் பயிர்ச்செய்கைக் கடன்களை வழங்குவதில் இந்தியன் ஓவசீஸ் வங்கியினுல் எடுக்கப்பட்ட முயற்சிகள் அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் புதிதாக ஏற்படுத்தப்பட்ட மாதிரி ''யாயா'' நெல் கடன் திட்டத்தில் அரச வங்கிகளும் பங்குபற்றுவதற்கு ஊக்கமளித்தன. இலங்கை வங்கி இத்திட்டத்திற்கு ஆதரவு வழங்கியதுடன் 1984 முடிவில் நெற்பயிர்ச் செய்கைக்காக இரு பருவங்களில் வழங்கப்பட்ட கடன்களில் பத்து இலட்சம் ரூபாய்களை வெற்றிகரமாகத் திருப்பிப் பெற்றது. இலங்கை வங்கியும் இந்தியன் ஓவசீஸ் வங்கியும் தற்போது இத்திட்டத்தின் கீழ் ரூ. 22 இலட்சத்தை வேளாண்மைக் கடன்களாக வழங்குகின்றன. கொடுகடன் திட்டத்தின் கீழ் புதிய நெல் உற்பத்திகள் கொண்டு வரப்படும்போது எதிர்வரும் ஆண்டுகளில் இத்தொகை உயர்வடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

அம்பாந்தோட்டையிலும் மொனராகலையிலுமுள்ள உலர் பிரதேசங்களின் வேளாண்மைக்கு வங்கிக் கடன்களை ஊக்குவிக்கும் முயற்சியில் வேளாண்மையாளர்களை நவீன வேளாண்மை முகாமைத்துவ முறைகளிலும் கடன் தொழிற்

அட்டவணை 2.9

**சுய தொழில் வாய்ப்பு, கிராம ஏற்பு ஆகிய திட்டங்களின்கீழ் மாத்தறை பிரதேச அலுவலகத்தின் செயற் திட்டங்களின்முன்னேற்றம் 1984 திசெம்பர் இறுதியில் உள்ளவாறு**

| துறை | சுய தொழில் வாய்ப்புத் திட்டம் | | | | கிராம ஏற்புத் திட்டம் | | | | முழு மொத்தம் | | | | மதிப்பிடப்பட்ட தொழில்வாய்ப்புகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | விதந்துரைக்கப் பட்டவற்றின் மொத்தம் | | ஒப்புதலளிக்கப்பட்ட வற்றின் மொத்தம் | | விதந்துரைக்கப் பட்டவற்றின் மொத்தம் | | ஒப்புதலளிக்கப்பட்ட வற்றின் மொத்தம் | | விதந்துரைக்கப்பட்ட வற்றின் மொத்தம் | | ஒப்புதலளிக்கப்பட்ட வற்றின் மொத்தம் | | |
| | எண்ணிக்கை | தொகை ரூ. | எண்ணிக்கை | தொகை ரூ. | எண்ணிக்கை | தொகை ரூ. | எண்ணிக்கை | தொகை ரூ. | எண்ணிக்கை | தொகை ரூ. | எண்ணிக்கை | தொகை ரூ. | |
| **வேளாண்மை** | | | | | | | | | | | | | |
| 1. வேளாண்மை ... | 37 | 101,515 | 16 | 55,035 | 4 | 11,000 | 1 | 2,000 | 41 | 112,515 | 17 | 57,035 | 20 |
| 2. பாற்பண்ணை ... | 28 | 148,200 | 11 | 68,900 | 7 | 35,200 | 6 | 29,800 | 35 | 183,400 | 17 | 98,700 | 18 |
| 3. கோழிப்பண்ணை ... | 89 | 550,600 | 54 | 332,000 | 5 | 46,200 | 4 | 35,400 | 94 | 596,800 | 58 | 367,400 | 59 |
| 4. ஆட்டுப்பண்ணை ... | 4 | 12,500 | — | — | 20 | 34,600 | 20 | 34,600 | 24 | 47,100 | 20 | 34,600 | 20 |
| 5. கடற்றொழில் ... | 6 | 33,450 | 4 | 16,000 | — | — | — | — | 6 | 33,450 | 4 | 16,000 | 4 |
| **கைத்தொழில்கள்** | | | | | | | | | | | | | |
| 6. அப்பமனையும், இனிப்புத் தொழிற்சாலையும் ... | 40 | 186,520 | 26 | 112,140 | 4 | 13,125 | 3 | 11,000 | 44 | 199,645 | 29 | 123,140 | 52 |
| 7. ஏனைய உணவு உற்பத்திகள் ... | 1 | 20,000 | — | — | — | — | — | — | 1 | 20,000 | — | — | — |
| 8. புகையிலை / பீடி ... | 4 | 20,385 | 3 | 16,200 | — | — | — | — | 4 | 20,385 | 3 | 16,200 | 10 |
| 9. கைத்தறி நெசவு ... | 15 | 68,550 | 12 | 57,050 | 8 | 37,500 | 6 | 27,500 | 23 | 106,050 | 18 | 84,550 | 41 |
| 10. தையல் ... | 55 | 266,515 | 38 | 169,415 | 5 | 30,000 | 4 | 25,000 | 60 | 296,515 | 42 | 194,415 | 72 |
| 11. ஏனைய புடவை உற்பத்திகள் ... | 20 | 98,070 | 10 | 40,370 | 1 | 10,000 | 1 | 10,000 | 21 | 108,070 | 11 | 50,370 | 24 |
| 12. தச்சுத் தொழில் ... | 30 | 128,070 | 14 | 61,720 | 2 | 10,500 | 2 | 10,500 | 32 | 138,570 | 16 | 72,220 | 23 |
| 13. தாள் உற்பத்திகள் ... | 3 | 14,490 | 2 | 9,090 | — | — | — | — | 3 | 14,490 | 2 | 9,090 | 3 |
| 14. உலோகமல்லாத கனிபொருட்கள் | 89 | 357,945 | 55 | 228,825 | 5 | 18,575 | — | — | 94 | 376,520 | 55 | 228,825 | 152 |
| 15. கல்லுடைத்தல் ... | 10 | 41,640 | 6 | 26,000 | 2 | 5,471 | 2 | 5,250 | 12 | 47,111 | 8 | 31,250 | 20 |
| 16. உலோக உற்பத்திகள் ... | 10 | 46,200 | 9 | 41,200 | — | — | — | — | 10 | 46,200 | 9 | 41,200 | 26 |
| 17. கயிற்று உற்பத்திகள் ... | 38 | 108,380 | 27 | 75,020 | 12 | 31,210 | 8 | 18,415 | 50 | 139,590 | 35 | 93,435 | 42 |
| 18. திருத்தலும் பேணலும் ... | 40 | 201,725 | 23 | 112,995 | 1 | 5,000 | 1 | 5,000 | 41 | 206,725 | 24 | 117,995 | 35 |
| 19. ஏனையவை ... | 38 | 204,730 | 23 | 120,130 | 7 | 38,170 | 4 | 20,520 | 45 | 242,900 | 27 | 140,650 | 40 |
| 20. பண்ணைக் கருவிகள் ... | 66 | 2,137,980 | 65 | 2,102,980 | 4 | 14,300 | 4 | 14,300 | 70 | 2,152,280 | 69 | 2,117,280 | 70 |
| 21. இரசாயனப் பொருட்கள் ... | 6 | 24,800 | 5 | 20,800 | — | — | — | — | 6 | 24,800 | 5 | 20,800 | 5 |
| 22. வர்த்தகமும், வணிகமும் ... | 19 | 95,200 | 13 | 58,900 | — | — | — | — | 19 | 95,200 | 13 | 58,900 | 14 |
| மொத்தம் ... | 648 | 4,867,465 | 416 | 3,724,770 | 87 | 340,851 | 66 | 249,285 | 735 | 5,208,316 | 482 | 3,974,055 | 750 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

பாடுகளிலும் ஈடுபடுத்துவதற்காகக் கடந்த இரு ஆண்டுகளில் தொடரான ஆய்வரங்குகள் நடாத்தப்பட்டன. உள்ளமைப்பு வசதிகளின் பற்றுக்குறை, விவசாயிகளினதும் வங்கியாளர்களதும் மனப்பாங்கு தொடர்பான பிரச்சினைகள் காரணமாக ஆரம்பத்தில் தடைகள் காணப்பட்டபோதிலும் இப் பிரதேசத்திலுள்ள பல்வேறு அரச, அரச சார்பற்ற அமைப்புக்களிலிருந்து கிடைத்த உதவி காரணமாக 1984 இல் கொடுகடன் அளிப்பதில் ஓர் முக்கிய திருப்பம் ஏற்பட்டது. இதன் விளைவாகப் பல வேளாண்மைக் குழுக்கள் மேட்டுநில நீர்ப்பாசன அமைப்புகளுக்காக நெல், காய்கறிகள், துணை உணவுப் பயிர்கள் என்பவற்றின் பயிர்ச் செய்கைக்காகவும், இரு சில்லு இழுபொறிகளைக் கொள்வனவு செய்வதற்காகவும் ரூ. 800,000 வரையிலான கடன்களைப் பெற முடிந்தது.

குத்தகைப் பிரச்சினைகள் உரிமம் பெறல் பதிவு செய்தல் நடைமுறைகள் என்பவற்றுடன் இணைந்த வங்கிக் கடன் வழங்கல் முறைகள் போன்ற கட்டுப்பாடுகள் இத்திட்டங்களின் கீழ் ஒதுக்கப்பட்ட மூல வளங்களின் முழுமையான பயன்பாட்டினைத் தடைசெய்தபோதும் பெருந்தோட்டத்துறையில் வளமாக்கிப் பாவனையை ஊக்குவிப்பதற்கான மத்திய வங்கியின் மீள்நிதியிடல் கொடுகடன் திட்டங்கள் இப்பிரதேசத்திலுள்ள சிறு உடைமையாளர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக விளங்கியது. எனினும், தேயிலை வளமாக்கி மீள்நிதியிடல் கடன் திட்டத்தின் கீழ் வங்கியினுல் வழங்கப்பட்ட நிதிகள் (காலி, மாத்தறை மாவட்டங்கள் தொடர்பாக) ரூ. 1,088,924 ஆகவும் தெங்கு வளமாக்கியைப் பொறுத்தவரை (மாத்தறை, அம்பாந்தோட்டை மாவட்டங்களில்) ரூ. 766,010 ஆகவும் விளங்கின.

இம் மீள்நிதியிடல் கொடுகடன் தொழிற்பாடுகளின் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவெனில் தனிப்பட்ட செயற்றிட்டங்கள், கொடுகடன் நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றின் மீதான நெருங்கிய மேற்பார்வை காரணமாகக் கடன் மீளப்பெறுகை வீதம் கூடிய அளவாக விளங்கியமையாகும். அனைத்து மீள் நிதியிடல் கொடுகடன் தொழிற்பாடுகளும் தொடர்பான பொதுவான மீளப் பெறுகை வீதம் 85 சதவீதமாகக் கணிக்கப்பட்டுள்ளது.

ஏறக்குறைய 83 சதவீதமான கடன்களின் மீளப்பெறுகைகளைப் பதிவு செய்த சுயவேலை வாய்ப்பு, கிராமிய கையேற்புத் திட்டங்கள் என்பன தொடர்பான ஒன்றிணைந்த கடன் மீள்பெறுகையின் நிலையினை அட்டவணை 2.9 தருகின்றது. அட்டவணையில் வேருகத் தரப்படாத நெல், உலர் வேளாண்மை போன்ற ஏனைய திட்டங்களின் கீழான கடன்கள் ஒவ்வொரு வகுப்பிலும் 90 சதவீதத்திற்கும் கூடுதலான கடன் மீளப் பெறுகைகளைப் பதிவு செய்துள்ளன.

மாத்தறைப் பிரதேச அலுவலகம் இப்பிரதேசத்தில் அபிவிருத்தி வங்கித் தொழிலை ஊக்குவிப்பதில் அரசிற்கும் அரசு சார்பற்ற முகவர்கள், நிறுவனங்களுக்கும் தனது ஆதரவினை வழங்கியது. இவ்வலுவலகம் பல்வேறு அமைப்புக்களால் நடாத்தப்பட்ட 30 ஆய்வரங்குகளிலும் பங்குபற்றியதுடன் வேளாண்மையாளர்களுடனும் ஏனைய நன்மை பெறுவோருடனும் இதேயளவு தொகையான கிராமிய மட்ட கலந்துரையாடல்களை ஒழுங்குசெய்ததுடன் கிராமிய மட்டத்தில் வேளாண்மை முகாமைத்துவ தலைமைத்துவப் பயிற்சி தொழிற்கூடங்கள் என்பவற்றையும் நடாத்தியது.

## அட்டவணை 2.10

### சுயதொழில் வாய்ப்பு, கிராம ஏற்பு ஆகிய திட்டங்களின் கீழ் மாத்தறை பிரதேச அலுவலகத்தினுல் மீளப்பெறப்பட்ட கடன்கள் 1984 திசெம்பர் இறுதியில் உள்ளவாறு

| துறை | | வழங்கப்பட்ட கடன்களின் தொகை (ரூபாய்கள்) | மூலதன மீள் கொடுப்பனவு | | |
|---|---|---|---|---|---|
| | | | அட்டவணைப் படுத்தப்பட்ட தொகை (ரூபாய்கள்) | மீளச் செலுத்தப்பட்ட தொகை (ரூபாய்கள்) | மேலதிகமாக வரவேண்டிய தொகை (ரூபாய்கள்) |
| **வேளாண்மை** | | | | | |
| 1. வேளாண்மை | ... | 30,700 | 8,736 | 6,996 | 1,740 |
| 2. பாற்பண்ணை | ... | 54,300 | 24,290 | 15,820 | 8,470 |
| 3. கோழிப்பண்ணை | ... | 180,700 | 87,705 | 63,421 | 24,284 |
| 4. ஆட்டுப்பண்ணை | ... | 20,500 | 3,000 | 2,310 | 690 |
| 5. கடற்றெழில் | ... | 13,000 | 5,570 | 2,300 | 3,270 |
| **கைத்தொழில்களும் பணிகளும்** | | | | | |
| 6. அப்பமனையும் இனிப்புத் தொழிற்சாலையும் | ... | 79,900 | 31,256 | 19,495 | 11,761 |
| 7. ஏனைய உணவு உற்பத்திகள் | ... | — | — | — | — |
| 8. புகையிலை / பீடி | ... | 16,200 | 14,332 | 5,228 | 9,104 |
| 9. கைத்தறி நெசவு | ... | 54,200 | 19,819 | 16,656 | 3,163 |
| 10. தையல் | ... | 136,840 | 72,320 | 56,732 | 15,588 |
| 11. ஏனைய புடவை உற்பத்திகள் | ... | 32,360 | 26,757 | 20,757 | 6,000 |
| 12. தச்சுத் தொழில் | ... | 37,770 | 25,089 | 18,233 | 6,856 |
| 13. தாள் உற்பத்திகள் | ... | 4,090 | 3,990 | 3,876 | 114 |
| 14. உலோகமல்லாக் கனிப் பொருட்கள் | ... | 103,960 | 89,141 | 68,449 | 20,692 |
| 15. கல்லுடைத்தல் | ... | 17,000 | 10,135 | 9,395 | 740 |
| 16. உலோக உற்பத்திகள் | ... | 32,300 | 20,385 | 17,985 | 2,400 |
| 17. கயிற்று உற்பத்திகள் | ... | 70,445 | 39,957 | 33,008 | 6,949 |
| 18. திருத்தலும் பேணலும் | ... | 73,232 | 41,113 | 27,256 | 13,857 |
| 19. ஏனையவை | ... | 95,430 | 42,887 | 32,464 | 10,423 |
| 20. பண்ணைக் கருவிகள் | ... | 1,912,450 | 411,063 | 388,767 | 22,296 |
| 21. இரசாயனப் பொருட்கள் | ... | 20,800 | 13,285 | 9,355 | 3,930 |
| 22. வர்த்தகமும் வணிகமும் | ... | 52,900 | 18,559 | 15,410 | 3,149 |
| மொத்தம் | ... | 3,039,077 | 1,009,389 | 833,913 | 175,476 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

காலியிலிருந்து பிபிலை வரையான பிரதேசத்தில் உள்ள 13 நிலையங்களில் தரவுகள் சேகரிப்போரின் வேலைகளை மேற்பார்வை செய்வதன் மூலம் மத்திய வங்கியின் நாடு பூராவுமான தரவுச் சேகரிப்பு நடவடிக்கைகளை ஒன்றிணைப்பதற்கு ஒரு கூறு ஏற்படுத்தப்பட்டது. சிறு, நடுத்தர அளவிலான கைத்தொழில்களின் கடன் திட்டத்தின் கீழ் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்களின்மீது பின் தொடர் நடவடிக்கைகளை நடாத்துவதற்கு உதவும் பொருட்டு இவ்வாண்டில் ஒரு கூறு ஏற்படுத்தப்பட்டது. இவ்வலுவலகத்தின் மேற்பார்வையின் கீழ் மாத்தறை, அம்பாந்தோட்டை மாவட்டங்களில் மொத்தமாக 35 கைத்தொழில் கூறுகள் வருகின்றன.

மாத்தறைப் பிரதேசத் தீர்ப்பனவு நிலையம் 1984 இல் ரூ. 8,680 இலட்சம் பெறுமதி கொண்ட 135,984 காசோலைகளைத் தீர்ப்பனவு செய்தது.

## பிரதேச அலுவலகம் — அநுராதபுரம்

அநுராதபுர பிரதேச அலுவலகம் அதன் மூன்ருவது தொழிற்படும் ஆண்டாகிய 1984 இல் வங்கிக் கொடுகடனின் ஊடாக இப்பிரதேசத்தில் குறிப்பாகக் குறைந்த வருமானத்தைப் பெறும் குழுவினரின் பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்கும் குறிக்கோளை அடைவதனைத் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தியது. தொடக்க ஆண்டின்போது ஆரம்பிக்கப்பட்ட சிறப்பு அபிவிருத்திக் கடன் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவது இத்திட்டத்தில் வர்த்தக வங்கிகளைக் கருத்து மிக்கதும் தாக்கமுள்ளதுமான பங்களிப்பினைச் செய்வதனை உறுதிப்படுத்தும்பொருட்டு ஆகக் கூடிய முதலிடத்தினைப் பெற்றது.

ஆண்டின் முதற் காலாண்டில் மிகையான மழையும் வெள்ளமும் இப்பிரதேசத்தின் பயிர்ச்செய்கையைப் பாதித்தமை சில கடன்களின் புத்தாக்கத்தையும், மீள் அட்டவணையிடலுக்கான நிகழ்ச்சித் திட்டத்தை இன்றியமையாததாக்கிய போதும் வட பகுதியின் வங்கித் தொழில் நடவடிக்கைகளில் கட்டுப்பாட்டை ஏற்படுத்திய மோசமடைந்த பாதுகாப்பு நிலைமையும் காணப்பட்டபோதும் கடன் வழங்கல் நிகழ்ச்சித் திட்டத்தின் பொதுவான செயலாற்றம் திருப்திகரமாகவே இருந்தது. மத்திய வங்கியின் நோக்கங்களை தெளிவுபடுத்தும் வகையில் பிரதேச அலுவலகத்தினுல் அடையாளம் காணப்பட்ட செயற்றிட்டங்களுக்குத் தொடர்ந்தும் கூடுதலான நிதியை வங்கியாளர்கள் நிதியீட்டியதுடன் தொழிற்பாட்டிலுள்ள செயற்றிட்டங்கள் வருமானம், தொழில் உருவாக்கல், கடன் மீள் கொடுப்பனவுகள் ஆகிய துறைகளில் ஊக்கமளிக்கத்தக்க பெறுபேறுகள் பதிவு செய்யப்பட்டன.

சிறப்பு அபிவிருத்திக் கடன் வழங்கல் திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்ட மொத்த எண்ணிக்கையான 954 செயற்றிட்டங்களில் 237 செயற்றிட்டங்கள் தொழிற்பாட்டிலிருந்தன. பிரதேச அலுவலகம் இதுவரை அநுராதபுர மாவட்டத்தில் 100 இற்கும் கூடுதலான கிராமங்களை அணுகக்கூடியதாயிருந்ததுடன் ஏறத்தாழ 25,000—30,000 பேருக்கு வங்கிகளுக்கூடாக அவர்களுக்குக் கிடைக்கத்தக்க வசதிகளையும் தீவிரமான வங்கித்தொழில் பழக்க வழக்கங்களைப் பின்பற்றுவதன் தன்மைகளையும் தெளிவுபடுத்தியது. தொடர்ச்சியான அடிப்படையில் நடத்தப்படும் இம்முயற்சியின் தாக்கத்தை இத்திட்டத்தின் கீழ் உதவியைப் பெறும் ஆட்களின் எண்ணிக்கையில் ஏற்பட்டிருக்கும் அதிகரிப்பிலிருந்து தெளிவாகக் காண முடிகின்றது.

பிரதேச அலுவலகம் சிறப்பு அபிவிருத்திக் கடன் வழங்கல் திட்டத்தின் உறுதியான செயற்பாட்டினை உறுதிப்படுத்தும் பொருட்டு வேளாண்மை, விலங்கு வளர்ப்பு, நலத்துறை மாவட்ட நிர்வாகமும் கீழ்மட்ட அலுவலர்களும் போன்ற திணைக்களங்கள், மற்றும் ஏனைய நிறுவனங்கள் முகவர்களுடன் அதன் தொடர்பை வலுவாக்கிக் கொண்டது. திட்டத்தின் தொழிற்பாட்டுத் தகுதியை உயர்த்தும் பொருட்டுத் தெரிந்தெடுக்கப்பட்ட இவ்விணைந்த பிரதேசங்களில் கடன்பாட்டாளர்களை அடையாளம் காண்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டது. மாறுபடும் தேவைகளைக் கூடியளவிற்குத் தாக்கமிக்கதாக்கும் ஒரு முயற்சியாகப் பல தொழிற்பாட்டுக் கொள்கைத் திருத்தங்களும் கூட மேற்கொள்ளப்பட்டன. சிறிய அளவுக் கைத்தொழில்களுக்கும் விலங்கு வளர்ப்புச் செயற்றிட்டங்களுக்குமான நிதியின் அளவு முறையே ரூ. 25,000 இற்கும் ரூ. 10,000 இற்கும் அதிகரிக்கப்பட்டது. இரு சில்லு இழுபொறிகள், வேளாண்மைக் கருவிகள், நிலப் பண்படுத்தலுக்கான நிதி உதவிகள் ஆகியவற்றை உள்ளடக்கும் விதத்தில் உள்ளடக்கப் பரப்பு விரிவாக்கப்பட்டிருக்கிறது.

இவ்வாண்டுக் காலத்தில் 317 செயற்றிட்டங்கள் அடையாளம் காணப்பட்ட துடன் இதில் 103 செயற்றிட்டங்கள் வங்கிகளால் ஒப்புதலளிக்கப்பட்டன. இவை வேளாண்மை, விலங்கு வளர்ப்புச் செயற்றிட்டங்களை உள்ளடக்கியிருந்த துடன் அடையாளங் காணப்பட்ட செயற்றிட்டங்களில் 75 சதவீதத்திற்கும் வகை கூறியது. வேளாண்மையில் நீர்ப்பாசனத்திற்கு வெட்டப்பட்ட கிணற்றின் பயன்பாடு ஊக்குவிக்கப்பட்டது. இவ்வாண்டுக் காலத்தில் செயற்றிட்ட நிதியிடலுக்காக வங்கிகளால் ரூ. 18 இலட்சம் கொண்ட மொத்தத் தொகை ஒதுக்கப்பட்டதுடன் ரூ. 14 இலட்சம் பகிர்ந்தளிக்கப்பட்டது.

வெள்ளம் பாதித்த செயற்றிட்டங்களின் விளைவாக இழக்கப்பட்ட தொழில் வாய்ப்புகளைக் கருத்திற் கொள்கையில் 204 பேர் அவர்களின் தொழிலில் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டதாக மதிப்பிடப்பட்டிருக்கின்றவேளையில் 89 பேர் தொழிற்பாட்டிலிருக்கும் செயற்றிட்டங்களிலிருந்து புதிய தொழில் வாய்ப்புக்களைப் பெற்றிருக்கின்றார்கள். தொழில் உருவாக்கத்தினைப் பொறுத்தவரையில் வேளாண்மைச் செயற்றிட்டங்களின் வருவாய் உருவாக்க இயலளவு ஒப்பீட்டு ரீதியில் ஓரளவு உயர்வானதாக இருந்தபோதும் வேளாண்மைச் செயற்றிட்டத்திலும் பார்க்க சிறிய அளவு கைத்தொழிற் செயற்றிட்டங்கள் உயர்ந்த உள்ளார்ந்த வளத்தினைக் கொண்டிருப்பதைக் காட்டின. தொழிற்பாட்டிலுள்ள செயற்றிட்டங்களினால் உருவாக்கப்பட்ட ஒன்றுசேர்ந்த மொத்த வருவாய் மீளாய்விற்குரிய ஆண்டில் ரூ. 70 இலட்சங்களாக இருக்குமென் மதிப்பிடப்பட்டது. கடன்பாட்டாளர்களுக்கு உரிய நேரத்தில் வழங்கப்பட்ட மதியுரை நெறிமுறைகள், கொடுகடன், செறிந்த பயிர்ச் செய்கை தொழில்நுட்பத்தின் மீதான் பயிற்சி ஆகியன் வேளாண்மைச் செயற்றிட்டங்களில் பெரும்பாலானவை வெற்றிபெற உதவிய முதன்மைக் காரணிகளாக இருந்தன.

1984 திசெம்பர் இறுதியில் 199 செயற்றிட்டங்கள் கடன்களின் மீள் கொடுப்பனவினைச் செலுத்தின. மொத்தமாக 14 கடன்பாட்டாளர்கள் தமது கடன்களை முழுமையாகச் செலுத்தினர். 1983 இன் 86 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1984 இன் மீள் கொடுப்பனவு வீதத்தில் வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. எனினும் மீள் கொடுப்பனவு ஏறத்தாழ 70 சதவீதமாகவே இன்னும் இருக்கிறது. ஆண்டின் தொடக்கப் பகுதியில் செயற்றிட்டங்கள் சிலவற்றுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் மீள் கொடுப்பனவில் வீழ்ச்சியை ஏற்படுத்தியிருப்பதனையும் சிலவற்றைப் பொறுத்தவரையில் வேண்டுமென்றே செலுத்தத் தவறியிருப்பதையும் கூட அவதானிக்கக் கூடியதாயிருந்தது. பாதிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் கடன்களது புத்தாக்க நிகழ்ச்சித் திட்டங்களும் மீள் அட்டவணையிடலும் ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதுடன் வேண்டுமென்றே செலுத்தத் தவறியவர்களுக்கெதிராகச் சட்டநடவடிக்கை எடுப்பது பற்றியும் நுணுக்கமாக ஆராய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கிராமங்களின் ஒருங்கிணைக்கப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமொன்று வேளாண்மை அபிவிருத்தி, நலம், கல்வி ஆகிய விடயங்களை உள்ளடக்குகின்ற விதத்தில் கொரவப்பொத்தானை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள ''தலகிட்டியாகம'' வில் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டது. சிறப்பு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் கள வேலைகளைப் பார்வையிடல் செய்முறை போன்ற உதவிகளின் மூலமாக கிராமத்தவர்கள் அவர்களின் பயிர்ச்செய்கை முறைகளில் முன்னேற்றமடைந்த தொழில்நுட்பங்களைப் பயன்படுத்த ஊக்குவிக்கப்பட்டார்கள். வெள்ளச் சேதங்கள் காணப்பட்டபோதும் கிராமத்தவர்கள் மிகச் சிறந்த வெற்றிகரமான அறுவடையைப் பெற்றுக்கொண்டமை இத்தகைய நடைமுறைகளின் வெற்றியை நிரூபிப்பதாக இருக்கிறது. குறிப்பாகச் சிறார்களுக்கிடையேயான கல்வி, நல முன்னேற்றம் ஆகியவற்றின் பயனும் கவனத்தில் எடுக்கப்பட்டிருக்கிறது. நிகழ்ச்சித் திட்டத்தின் பொதுவான தாக்கத்தை அருகில் அமைந்துள்ள மேலும் ஐந்து கிராமங்கள் வங்கி உதவியை நாடியமையிலிருந்தும் தெளிவாக உணர முடிகின்றது.

## அநுராதபுர பிரதேச அலுவலகத்தின் கிராம ஏற்பு சுயதொழில் வாய்ப்புச்

| வகை | | வங்கிகளுக்கு அளிக்கப் பட்ட செயற்றிட்டங்கள் | | வங்கிகளினல் ஒப்பு தலளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் | |
|---|---|---|---|---|---|
| | | அலகுகள் | பெறுமதி | அலகுகள் | பெறுமதி |
| **1. நீண்டகால நீர்ப்பாசன வசதிகளுடனான வேளாண்மை** | | | | | |
| 1.1 | கிணறுகளும் நீரிறைக்கும் பம்பிகளும் ... | 288 | 2,529.8 | 87 | 765.6 |
| 1.2 | வாழைப் பயிர்ச்செய்கை ... | 3 | 13.3 | 1 | 3.5 |
| 1.3 | நீரிறைக்கும் காற்றாடி ... | 29 | 401.2 | 1 | 22.5 |
| 1.4 | இரு சில்லு இழுபொறிகள் ... | 2 | 80.0 | — | — |
| **2. கால்நடை** | | | | | |
| 2.1 | கோழிப்பண்ணை ... | 77 | 474.2 | 29 | 173.0 |
| 2.2 | பாற்பண்ணை ... | 138 | 800.7 | 24 | 128.1 |
| 2.3 | ஆட்டுப்பண்ணை ... | 149 | 602.3 | 43 | 160.5 |
| 2.4 | பன்றிப்பண்ணை ... | 78 | 248.1 | 22 | 79.5 |
| **3. கைத்தொழில்** | | | | | |
| 3.1 | கடினச் சீமெந்து கலவை வேலைகள் ... | 2 | 8.6 | — | — |
| 3.2 | செங்கல் தயாரிப்புக்கள் ... | 11 | 46.3 | 5 | 22.8 |
| 3.3 | அப்பமணையும் இனிப்பு வகையும் ... | 39 | 223.3 | 21 | 102.4 |
| 3.4 | கொல்ல வேலை, தகர வேலை, ஒட்டு வேலைகள் ... | 13 | 90.8 | 5 | 67.6 |
| 3.5 | தச்சு வேலையும் மரம் செதுக்குதலும் ... | 15 | 106.0 | 10 | 72.4 |
| 3.6 | பீடியும் சுருட்டுத் தயாரிப்பும் ... | 4 | 19.9 | 3 | 13.9 |
| 3.7 | ஆடையும் பட்டிக்கும் (வர்ணம் தீட்டிய துணிகள்) ... | 21 | 144.2 | 8 | 55.5 |
| 3.8 | கயிற்று உற்பத்திகள் ... | 7 | 27.3 | 4 | 14.8 |
| 3.9 | சவர்க்காரம், எழுது பொருட்கள் தயாரித்தல் ... | 3 | 20.3 | 1 | 5.5 |
| 3.10 | ஆயுர்வேத மருந்துத் தயாரிப்புக்கள் ... | 2 | 9.0 | 1 | 3.0 |
| 3.11 | தோல் உற்பத்திகள் ... | 2 | 21.0 | — | — |
| 3.12 | களிமண் கைத்தொழில் ... | 11 | 65.5 | 1 | 10.0 |
| 3.13 | மின்கலத்திற்கான அமில உற்பத்தி ... | 1 | 45.0 | — | — |
| 3.14 | மீன் வளர்க்கும் தொட்டி ... | 1 | 10.0 | — | — |
| **4. பணிகள்** | | | | | |
| 4.1 | வர்த்தகம், வீட்டுப்பயன்பாட்டுக்குத் தேவையான பொருட்களும், பலசரக்குகளும் உறைகளில் அடைத்தல் ... | 15 | 59.5 | 4 | 11.0 |
| 4.2 | ஈருருளிகள் திருத்தல் பிரிவுகள் ... | 25 | 162.0 | 10 | 47.5 |
| 4.3 | நிழற்படமெடுத்தல் ... | 2 | 15.0 | 1 | 8.5 |
| 4.4 | சிகையலங்காரம் ... | 7 | 24.9 | 4 | 14.8 |
| 4.5 | மின்னியக்க வேலை ... | 2 | 26.0 | 1 | 16.0 |
| 4.6 | மின்கலத்திற்கான மின்னூட்டல் அலகுகள் ... | 2 | 16.4 | 2 | 16.4 |
| 4.7 | போக்குவரத்துப் பணிகள் ... | 1 | 2.0 | — | — |
| 4.8 | விளம்பர அட்டைகள் தயாரித்தல் ... | 1 | 5.0 | 1 | 5.0 |
| 4.9 | வானொலி திருத்தல் பிரிவுகள் ... | 3 | 15.5 | — | — |
| மொத்தம் ... | | 954 | 6,313.1 | 289 | 1,819.8 |

அட்டவணை 2.11

## செயற்றிட்டங்களின்கீழ் பெறப்பட்ட முன்னேற்றம் 1984 திசெம்பர் இறுதியிலுள்ளவாறு

(பெறுமதி ஆயிரம் ரூபாய்களில்)

| வங்கியினால் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்கள் | | | | மீள்கொடுப்பனவுகள் | | | | மதிப்பீடு செய்யப்பட்டு பெறப்பட்ட வருவாய் | தொழில் வாய்ப்பு | செலுத்தப்பட்ட அலகுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அலகுகள் | வங்கிக் கடன் | கடன் பட்டோர் உதவு தொகை | மொத்தம் | திரும்பி வரவேண்டிய கடன் அலகுகள் | வரவேண்டிய மொத்தத் தொகை 1984 திசெம்பர்இறுதியில் | திருப்பி செலுத்தப்பட்ட மொத்தத் தொகை 1984 திசெ. | வரவேண்டிய மொத்தத் தொகை | | | |
| 76 | 656.3 | 151.7 | 808.0 | 65 | 105.8 | 73.7 | 32.2 | 228.0 | 112 | 4 |
| 1 | 3.5 | 0.5 | 4.0 | — | — | — | — | 0.8 | 1 | — |
| 1 | 22.5 | 2.5 | 25.0 | 1 | 1.4 | 1.4 | — | 3.0 | 4 | — |
| — | — | — | — | — | — | — | — | — | — | — |
| 22 | 125.5 | 41.0 | 166.5 | 22 | 32.7 | 24.1 | 8.6 | 8.0 | 7 | — |
| 12 | 61.2 | 9.9 | 71.1 | 6 | 5.3 | 4.3 | 1.0 | 10.1 | 12 | — |
| 35 | 123.0 | 17.1 | 140.1 | 24 | 23.4 | 18.1 | 5.3 | 24.0 | 35 | 2 |
| 17 | 59.8 | 19.5 | 79.2 | 16 | 16.5 | 9.9 | 6.6 | 10.0 | 10 | 1 |
| — | — | — | — | — | — | — | — | — | — | — |
| 3 | 14.5 | 3.5 | 18.0 | 3 | 8.8 | 2.8 | 6.0 | 2.0 | 2 | — |
| 18 | 84.4 | 40.1 | 124.5 | 18 | 58.4 | 42.7 | 15.7 | 180.0 | 30 | — |
| 4 | 35.6 | 8.4 | 44.0 | 2 | 2.0 | 2.0 | — | 10.0 | 4 | 2 |
| 9 | 65.1 | 19.5 | 84.7 | 8 | 25.1 | 20.8 | 4.2 | 20.0 | 8 | — |
| 3 | 13.9 | 2.7 | 16.6 | 3 | 8.5 | 7.6 | 0.9 | 18.0 | 12 | — |
| 8 | 55.5 | 23.4 | 79.0 | 5 | 9.7 | 8.9 | 0.8 | 30.0 | 20 | 3 |
| 4 | 14.8 | 2.3 | 17.1 | 4 | 7.5 | 4.2 | 3.4 | 5.0 | 4 | — |
| 1 | 5.5 | 1.2 | 6.7 | 1 | 5.3 | 3.4 | 1.8 | 2.0 | 1 | — |
| 1 | 3.0 | 1.0 | 4.0 | 1 | 1.9 | 1.9 | — | 2.8 | 2 | — |
| — | — | — | — | — | — | — | — | — | — | — |
| — | — | — | — | — | — | — | — | — | — | — |
| — | — | — | — | — | — | — | — | — | — | — |
| — | — | — | — | — | — | — | — | — | — | — |
| 3 | 8.0 | 1.4 | 9.4 | 2 | 4.9 | 1.3 | 3.6 | 6.0 | 3 | 1 |
| 10 | 47.5 | 20.5 | 68.0 | 10 | 13.6 | 12.0 | 1.6 | 23.6 | 12 | — |
| 1 | 8.5 | 5.0 | 13.5 | 1 | 5.2 | 5.3 | — | 3.0 | 1 | — |
| 4 | 14.9 | 3.3 | 18.1 | 4 | 4.8 | 3.1 | 1.7 | 4.5 | 7 | — |
| 1 | 16.0 | 8.0 | 24.0 | 1 | 1.3 | 1.3 | — | 12.4 | 3 | — |
| 2 | 16.4 | 5.0 | 21.4 | 1 | 2.5 | 2.5 | — | 2.1 | 1 | 1 |
| — | — | — | — | — | — | — | — | — | — | — |
| 1 | 5.0 | 0.6 | 5.6 | 1 | 1.1 | 1.1 | — | 4.0 | 2 | — |
| — | — | — | — | — | — | — | — | — | — | — |
| 237 | 1,460.4 | 388.1 | 1,848.5 | 199 | 345.7 | 252.4 | 93.4 | 609.3 | 293 | 14 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

1984 இல் இப்பிரதேச அலுவலகம் பயிர்ச்செய்கை, விலங்கு வளர்ப்பு அபிவிருத்தி ஆகியவற்றை உள்ளடக்கும் விதத்தில் 16 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியது. செறிவான பயிர்ச்செய்கைக்கு வேண்டிய கொள்கை ரீதியான பின்னணியை விரிவுரைகள் வழங்கிய வேளையில் களப் பார்வையிடலும் செய்முறைகளும் பங்குபற்றியோருக்கு நிலத்தைப் பயன்படுத்தல், கிணற்று நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தல், நீர்ப் பம்புகளைப் பாதுகாப்பாகக் கையாளுதல், நாற்று மேடைகளைத் தயாரித்தல், வளமாக்கி, பூச்சி கொல்லிகளைப் பயன்படுத்தல் ஆகியவற்றில் செய்முறை அறிவும் வழங்கியது. இதுவரை ஏறத்தாழ 1,600 பேர் இந் நிகழ்ச்சித் திட்டங்களிலிருந்து வேளாண்மை, விலங்கு வளர்ப்பு, நலத்துறைத் திணைக்களங்களிலிருந்தான நிபுணர்களால் நடாத்தப்பெற்ற பயிற்சிகளிலிருந்தும் நன்மைகளைப் பெற்றுள்ளனர். இளைஞர் அலுவல்கள் தொழில்வாய்ப்பு அமைச்சு, கைத்தொழில் அபிவிருத்திச் சபை போன்ற ஏனைய முகவர்களால் நடத்தப்பெற்ற பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களையும் பிரதேச அலுவலகம் செயற்றிட்ட முகாமை, கிராம முதலீட்டாளர்களுக்குக் கணக்கிடும் நடைமுறை போன்றவற்றில் விபரமான அறிவாற்றலை வழங்கப் பயன்படுத்திக் கொண்டது.

பிரதேச அலுவலகம் கொடுகடன் வழங்கல் முறையின் தகுதியை உயர்த்தி நடைமுறைப்படுத்தல். நிறுவன ரீதியான இயலளவுகளின் நடைமுறைப்படுத்தலை வலுவாக்கவும், பிரதேச அலுவலகத்திற்கும் அபிவிருத்தி வேலைகளில் ஈடுபட்டுள்ள மற்றவர்களுடன் ஒழுங்கான தொடர்புகளையும் கருத்துப் பரிமாற்றங்களையும் உறுதி செய்யவும் முயற்சிகளை மேற்கொண்டது. இந்நோக்கத்திற்காக வங்கி அலுவலர்கள், வேளாண்மை அபிவிருத்தி மேலாண்மைச் சபையின் முகாமையாளர்கள், கிராமோதயச் சபைத் தலைவர்கள், ஏனைய கீழ்மட்ட அலுவலர்கள் ஆகியோருக்குப் பல ஆய்வரங்குகள், தொழிற்கூட, கலந்துரையாடல்கள் என்பன மீளாய்விற்குரிய ஆண்டில் நடத்தப்பெற்றன.

பிரதேச அலுவலகம் மத்திய வங்கியின் நாடு தழுவிய தரவு சேகரிப்புத் திட்டத்திற்குத் தொடர்ந்தும் உதவியும், மேற்பார்வையும் செய்து வந்தது. சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில் திட்டத்தின் கீழான செயற்றிட்டங்களின் பரீட்சிப்புக்கள் பெரும் எண்ணிக்கை கொண்ட செயற்றிட்டங்களை உள்ளடக்கும் விதத்தில் விரிவாக்கப்பட்டது. மீளாய்விற்குரிய ஆண்டில் அத்தகைய செயற்றிட்டங்கள் 25 பரீட்சிக்கப்பட்டன. ''சிறியதுறைக்'' கைத்தொழில் செயற்றிட்டங்கள் மீதான தரவுகள் தொடர்ந்தும் சேகரிக்கப்பட்டன. சிறியதுறைக் கைத்தொழில் செயற்றிட்டங்களின் செயற்பாடு செயலாற்றம் என்பன மீதான தொரு அறிக்கை தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. மாவட்ட நிருவாகத்தினுல் இணைக்கப்பட்டு மாவட்ட நலத்துறைப் பரிசோதகர்களால் 1984 செத்தெம்பர் மாத காலப்பகுதியில் நடத்தப்பெற்ற ''நலன்மாதத்''தின் செயலாற்றத்தினை மீளாய்வு செய்வதற்காக ஒரு அளவை நடத்தப்பட்டது. கண்டுபிடிப்புக்களின் அடிப்படையில் அறிக்கையொன்று மாவட்ட மேலாண்மையாளர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

பிரதேச அலுவலகத்தின் தீர்ப்பனவு வீடு ரூ. 1,485 இலட்சம் பெறுமதி கொண்ட மொத்தக் காசோலைகளைத் தீர்ப்பனவு செய்தது.

## வாடிக்கையாளர் பணி

மத்திய வங்கி, வர்த்தக வங்கிகள், குறிப்பிட்ட அபிவிருத்தி சார்ந்த அமைச்சுக்கள், அரச நிறுவனங்கள் ஆகியவற்றின் மூத்த அலுவலர்களை உள்ளடக்கிய வங்கித் தொழில் பணிக் குழுவானது 1981 இன் நடுப்பகுதியில் நிறுவப்

பட்டது. இது வாடிக்கையாளர்களுக்கான வர்த்தக வங்கிகளின் பணிகளை முன்னேற்றுவதனையே முக்கிய நோக்கமாகக் கொண்டு தொழிற்படுகின்றது. 1977—1983 காலப்பகுதியில் மத்திய வங்கியின் செலாவணிக் கட்டுப்பாடு, வங்கித் தொழில் திணைக்களங்களினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள்/தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் பொருளடக்கமொன்றினைத் தொகுப்பதற்கு 1984 ஆம் ஆண்டில் இக்குழு காரணமாக இருந்தது. அண்மைக் காலத்தில் இலங்கையில் தொழிற்பாடுகளைத் தொடங்கிய புதிய வங்கிகளுக்கு உதவுவதை முக்கிய நோக்கமாகக் கொண்டே இது மேற்கொள்ளப்பட்டது. இக்குழு வங்கித் தொழில் வாடிக்கையாளர் பணியின்மீது அளவையொன்றை நடத்துவதற்கான ஒழுங்குகளைப் பூரணப்படுத்தியதுடன் 10,000 வாடிக்கையாளர்களைக் கொண்ட ஒரு பரவலான அளவீட்டு மாதிரிக்கான கேள்விக் கொத்துக்களும் 1985 இன் தொடக்கப் பகுதியில் அனுப்பி வைக்கும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது.

## வெளியீடுகள்

1983 ஆம் ஆண்டுக்கான இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை, நாணயச் சட்ட விதியின் 35 வது பிரிவு நியதிகட்கமைய மாண்புமிகு நிதி திட்டமிடல் அமைச்சருக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. 1983 பொருளாதார ஆய்வும் ஆண்டின் பிற்பகுதியில் வெளியிடப்பட்டது. இதேவேளை மாதாந்தச் செய்தித்திரட்டு ஒழுங்காக வெளியிடப்பட்டு வந்தது. 1984 ஆம் ஆண்டின் முதலரைப்பகுதியில் ஓர் சுருக்கமான பொருளாதார ஆய்வு ''1984 ஆம் ஆண்டின் முதலரைப்பகுதிக்கான பொருளாதாரச் செயலாற்றம்'' என்ற தலைப்பின் கீழ் வெளியிடப்பட்டது.

இவ்வாண்டுக் காலப் பகுதியில் விரிவான புள்ளிவிபர அட்டவணைகளைக் கொண்ட 1981/82 இற்கான நுகர்வோர் நிதியும் சமூகப் பொருளாதார அளவை அறிக்கையின் பகுதி I உம் 1978–79 இற்கான நுகர்வோர் நிதியும் சமூகப் பொருளாதார அளவை அறிக்கையின் பகுதி II உம் வெளியிடப்பட்டன. இவ்வாண்டுக் காலப்பகுதியில் நாடு முழுவதும் தரவுகள் சேகரிக்கும் முறையின் கீழ் சேகரிக்கப்பட்ட தரவுகளை உள்ளடக்கிய, விலை கூலிப் புள்ளிவிபரங்கள்–1983 வெளியிடப்பட்டன. ஆண்டுக்கான அடிப்படைத் தரவுகளைக் கொண்ட 1984ஆம் ஆண்டுக்கான சமூக பொருளாதார தரவு ஏடும் வெளியிடப்பட்டது. 1982–1983 இலிருந்து 1985/1986 காலப் பகுதிக்கான வியாபார நடவடிக்கைகளிலும் தனியார் முதலீடுகளினதும் மீதான ஓர் அறிக்கையும் வெளியிடப்பட்டது.

வேளாண்மைக் கொடுகடன் மீதான தரவுகளை உள்ளடக்கிய கொடுகடன் செய்தித் திரட்டு எண் 4 உம் ''இலங்கையில் வங்கித் தொழில்களுக்கான வழிகாட்டிகள்'' சிங்கள மொழிபெயர்ப்பும் 1983 இல் வெளியிடப்பட்டன. பின்னைய வெளியீடு பெருமளவு கேள்வி காரணமாக மீள அச்சிடப்பட்டது.

சிறப்பிதழ் 7 இல் முனைவர் ஆர். டயஸ் பண்டாரநாயக்காவின் ''இலங்கையின் தேயிலை உற்பத்தியின் எதிர்கால நோக்கும், துறைகளின்படியான செயலாற்றத்தை விரிவடையச் செய்வதற்கான வழிமுறைகளும்'' எண் 8 இல் முனைவர் நிமால் சந்திரரத்னவின் ''கிராமிய சேமிப்புத்திரட்டுதல்'' என்பவையும் வெளியிடப்பட்டன.

செய்திகள் அளவீடும், ''சற்றகன'' என்ற சிங்கள வெளியீடும் தொடர்ந்து வெளியிடப்பட்டு வந்தன. இவற்றிற்கான கேள்வியில் ஏற்பட்ட அதிகரிப்பிலிருந்து படிக்கும் பொதுமக்களிடம் அவை பெற்றுள்ள பிரபல்யம் புலனாகின்றது.

மத்திய வங்கி, தொடர்ந்தும் வேளாண்மை, கிராமிய அபிவிருத்தியும் கொடுகடனும் என்பவை தொடர்பான தரவுகளைத் திரட்டி 1984 ஆம் ஆண்டின் அரையாண்டுக்கான செய்தித்திரட்டு மூலம் வெளியிட்டது. வங்கி தொடர்ந்தும் ''கெமினய தொறதுறு'' என்னும் 1983 இல் ஆரம்பிக்கப்பட்ட, வேளாண்மை உள்ளீட்டு சில்லறை விலைகளடங்கிய காலாண்டு சஞ்சிகையை வெளியிட்டது.

## ஆய்வரங்குகள்

1984 ஒகத்தில் வங்கி, ஆசிய பசுபிக் பிராந்திய வேளாண்மை கொடுகடன் அமைப்பும் பன்னுட்டு அபிவிருத்திக்கான சேர்மன் அமைப்பும் சேர்ந்து இப் பிராந்தியத்திலுள்ள நாடுகளிலிருந்தான 21 பிரதிநிதிகட்கான உயர் அலுவலர் கல்வி/சுற்றுலாத் திட்டமொன்றினை ஒழுங்கு செய்தது. மக்கள் வங்கியும் இலங்கை வங்கியும் வங்கிக்கு நிதியீட்டலிலும் ஒழுங்கு செய்வதிலும் உதவியாகவிருந்தன. இந்த கல்வி/சுற்றுலா 8 நாட் காலப் பகுதியைக் கொண்ட கொழும்பில் ஒரு மாநாட்டையும் இலங்கை வங்கியாலும், மக்கள் வங்கியாலும், மத்திய வங்கியினாலும் நாட்டின் பல பகுதிகளிலுமுள்ள உதவி செய்யப்பட்ட பல்வகைப்பட்ட செயற்றிட்டங்களுக்கு வருகை தருதலையும் உள்ளடக்கியிருந்தது.

இலங்கை மத்திய வங்கி 1984 யூலை 23—ஒகத்து 24 வரை தென்கிழக்கு ஆசிய மத்திய வங்கிகளின் ஆய்வுப் பயிற்சி நிலையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட ''நிதி நிறுவனங்களின் பரீட்சிப்பும் மேற்பார்வையும்''என்ற பொருள் மீதான எட்டாவது தென்கிழக்காசிய மத்திய வங்கிகளின் பயிற்சிநெறியை நடாத்தியது. இது நேரடியாக வர்த்தக வங்கிகளினதும் நிதி நிறுவனங்களினதும் சட்டதிட்டங்களில் நேரடியாகத் தொடர்புடைய மத்திய வங்கி அலுவலர்கட்கும் நாணய மேலாண்மையாளர்கட்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் இந்தோனேசிய வங்கி, மலேசிய நிகாரா வங்கி, நேபாள ராஸ்ர வங்கி, சிங்கப்பூர் நாணய மேலாண்மைச் சபை, தாய்லாந்து வங்கி, இலங்கை மத்திய வங்கி என்பவற்றிலிருந்து பங்கு பற்றியோரையும் உள்ளடக்கியிருந்தது.

## அளவீடுகள்

''இலங்கையில் 1970 ஆம் ஆண்டு தொடக்கம் வாழ்க்கைத் தரங்களினதும், கொள்கைகளினதும் வளர்ச்சி'' என்பது பற்றி உலக வங்கியுடனிணைந்த ஆய்வு ஒன்று ஆய்வுக்குரிய ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வு கடந்த பத்தாண்டுகளில் அரசினால் தொடங்கப்பட்ட கொள்கைகளைக் கருத்திற் கொண்டு இலங்கையின் வாழ்க்கைத் தரத்தின் போக்கினை ஆராய்வதையே நோக்கமாகக் கொண்டிருந்தது.

பெப்புருவரியில் வங்கி 1983 யூலை கலவரங்களினால் பாதிக்கப்பட்ட வர்த்தக, கைத்தொழில் நிறுவனங்கட்கு ஏற்பட்ட பாதிப்புக்களை அளவீடு செய்த நடவடிக்கைக் குழுவின் அறிக்கைமீது, கைத்தொழில்களினதும், வர்த்தக நிறுவனங்களினதும் புனருத்தாரணத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தினை மதிப்பிடும் நோக்குடன் ஓர் தொடர் ஆய்வினை நடாத்தியது.

நடுத்தர நீண்ட காலக் கொடுகடன் திட்டங்களின் கீழான கொடுகடன் திட்டங்களில் மாத்தளை மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ் இரு சில்லு இழுபொறிக் கொள்வனவிற்கான கடன் திட்டத்தின்மீது விரிவான ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இறக்குமதிகட்காகத் திறக்கப்பட்ட கொடுகடன் பத்திரங்கள் மீதான மாதாந்த தரவுகளைப் பெறுவதன்மூலம் இறக்குமதி தாராளமாக்கல் மீதான மேற்பார்வையைத் தொடர்ந்தும் வங்கி மேற்கொண்டது.

## பயிற்சி

இவ்வாண்டுக் காலப்பகுதியிலும் மத்திய வங்கி கல்வி சார்ந்த, கல்வி செய்முறைப் பயிற்சி என்பவற்றில் வங்கி அலுவலர்களைப் பயிற்றுவிக்கும் திட்டத்தை தொடர்ந்தது. கல்வி சார்ந்த படிப்புக்கள் பொருளியல், புள்ளிவிபரவியல் எனும் துறையில் பட்டப்பின் படிப்புகட்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டன. செய்முறைப் பயிற்சிகள், குறுந்தவணை பாடநெறி, ஆய்வரங்குகள், கல்விச் சுற்றுலாக்கள் போன்ற முறைகளில் இடம் பெற்றன. இவை கிராமிய அபிவிருத்தி, வேளாண்மைக் கைத்தொழில் கொடுகடன், வங்கித்துறை, பொருளியல் கணனிமுறைக் கல்விகள் எனும் துறைகளைக் கொண்டிருந்தது. பயிற்சிகள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பெறப்பட்டன.

பல பயிற்சிநெறிகள் வங்கியின் கிராமிய வங்கி அலுவலர் பயிற்சிக் கல்லூரியில் நடாத்தப்பட்டமையால், மத்திய வங்கி அலுவலர்கள் ஏனைய உள்ளூர் பயிற்சி நிலையங்கட்கும் பயிற்சிக்காக அனுப்பப்படுவது பெருமளவுக்குக் குறைக்கப்பட்டது. பயிற்சிக் கல்லூரியில் மொத்தம் 90 அலுவலர்கள் பயிற்சி பெற்றனர். பயிற்சித்துறையிலும், ஆய்வரங்குகளிலும் அலுவலர்கள் ஈடுபட்ட ஏனைய நிறுவனங்கள், இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனம், தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனம், வியாபார முகாமைத்துவ நிறுவனம் என்பவையாகும்.

மத்திய வங்கி அலுவலர்களுக்கான இலங்கை வங்கியிலும், மக்கள் வங்கியிலும் இடம்பெற்ற பணிபுரியும்போதே பயிற்சிபெறும் திட்டம் இக்காலப்பகுதியிலும் தொடர்ந்து நடைபெற்றது. 1984 ஆம் ஆண்டு காலப்பகுதியில் உயர் அலுவலர், உயர் அலுவலர் அல்லாத தரமுடைய மொத்தம் 33 அலுவலர்கள் இப் பயிற்சிகளை முடித்துக் கொண்டனர்.

## ஆளணி

ஆளுநர், முனைவர் டபிள்யூ. இராசபுத்ர 1984 ஆம் ஆண்டுக் காலத்தில் பின்வரும் மாநாடுகளிலும் கூட்டங்களிலும் கலந்துகொண்டார்:—

(அ) பர்மா, இரங்கூனில் நடைபெற்ற தென்கிழக்காசிய மத்திய வங்கி ஆளுநர்களின் பத்தொன்பதாவது மாநாடு.

(ஆ) பாகித்தானில் நடைபெற்ற ஆசியத்தீர்ப்பனவு ஒன்றிய ஆளுநர்கள் சபையின் பன்னிரண்டாவது கூட்டம்.

(இ) ஐக்கிய அமெரிக்காவில் வாசிங்டனில் நடைபெற்ற பன்னுட்டு நாணய நிதியத்தின் இடைநிலைக் குழுவினதும் அபிவிருத்திக்குழுவினதும் குழு 24 இன் கூட்டங்கள்.

(ஈ) இலண்டனில் நடைபெற்ற பொதுநலவமைப்பு நாடுகளின் மத்திய வங்கி ஆளுநர்களின் மாநாடு, கிரிசு, ஏதென்சில் கிரீஸ் வங்கியினுல் வட்டி வீதங்களை ஒழுங்குபடுத்தல் என்ற விடயத்தின் மீது நடைபெற்ற கலந்துரையாடல்கள்.

(உ) ஐக்கிய அமெரிக்கா, வாசிங்டனில் நடைபெற்ற குழு 24 இனதும் இடைநிலைக் குழுவினதும் கூட்டம். பன்னுட்டு நாணய நிதியத்தினதும், புத்தாக்க அபிவிருத்திக்கான பன்னுட்டு வங்கியினதும் ஆண்டுக் கூட்டங்கள்.

(ஊ) ஆயென்ரைனு, புவனஸ்அயர்ஸ்சில் பொருளாதார ஒருங்கிணைப்பும் படுகடனும் என்ற விடயத்தின் மீது நடைபெற்ற மாநாடு.

திரு. என். பி. பண்டிதரத்ன 1984 திசெம்பர் 1 ஆம் நாளன்று நாணயச் சபையிலிருந்தும் இராஜினுமாச் செய்தார்.

திரு. டி. எஸ். ஜெயசுந்தர 1984 திசெம்பர் 1 ஆம் நாளன்று நாணயச் சபையின் உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

நிதி திட்டமிடல் அமைச்சின் செயலாளர் நாட்டில் இல்லாத காலப் பகுதியில் திறைசேரியின் துணைச் செயலாளரான திரு. பி. சி. சண்முகம் நாணயச் சபையின் மாற்று அலுவல்சார் உறுப்பினராகச் செயற்பட்டார்.

நிதி திட்டமிடல் அமைச்சின் செயலாளரும், திறைச்சேரிக்கான துணைச் செயலாளரும் இல்லாத காலப்பகுதியில் நிதி திட்டமிடல் அமைச்சின் பதில் செயலாளர் திரு. பி. மகாதேவா நாணயச்சபைக் கூட்டங்களில் கலந்துகொண்டார்.

சனவரி, பெப்புருவரி, ஏப்பிறல், யூன், செத்தெம்பர், ஒற்ரேபர், நவெம்பர் ஆகிய மாதங்களில் ஆளுநர் இலங்கையில் இல்லாத காலப் பகுதியில் மூத்த துணை ஆளுநர் திரு. டி. எல். கன்னங்கரா வங்கியின் முதன்மை நிறைவேற்று அலுவலராகவும் நாணயச் சபையின் தலைவராகவும் செயற்பட்டார்.

செத்தெம்பர் மாதத்தில் ஆளுநர், மூத்த துணை ஆளுநர் திரு. டி. எல். கன்னங்கரா ஆகிய இருவரும் இலங்கையில் இல்லாத காலப் பகுதியில் துணை ஆளுநர் திரு. ரி. ஜி. புஞ்சிஅப்புகாமி மூத்த துணை ஆளுநராகப் பதவியிலமர்த்தப்பட்டு வங்கியின் முதன்மை நிறைவேற்று அலுவலராகவும், நாணயச் சபையின் தலைவராகவும் செயற்பட்டார்.

**நியமனங்கள்**

துணை ஆளுநர் திரு. டி. எல். கன்னங்கரா 1984 ஒகத்து 2 ஆம் நாளிலிருந்து மூத்த துணை ஆளுநராகப் பதவியிலமர்த்தப்பட்டார்.

நிறைவேற்றுப் பணிப்பாளர் திரு. ரி. ஜி. புஞ்சி அப்புகாமி 1984 ஒகத்து 1 ஆம் நாளிலிருந்து துணை ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

வங்கித் தொழில் அபிவிருத்தி, பயிற்சித் திணைக்கள மதியுரையாளர் திரு. எஸ். டபிள்யூ. வி. அமரசூரியா உயர் பதவி வகுப்பு சிறப்புத் தரத்திற்குப் பதவி உயர்த்தப்பட்டதுடன் 1984 மாச்சு 1 ஆம் நாளிலிருந்து நிறைவேற்றுப் பணிப் பாளராகப் பதவியிலமர்த்தப்பட்டார்.

முதன்மைக் கணக்காளர் திரு. யு. ஏ. த சில்வா உயர் பதவி வகுப்பு சிறப்புத் தரத்திற்கு 1984 நவெம்பர் 6 ஆம் நாளிலிருந்து பதவி உயர்த்தப்பட்டார். அவர் 1984 நவெம்பர் 9 ஆம் நாளிலிருந்து நிறைவேற்றுப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

மக்கள் வங்கியின் தலைவராகத் தொழிலாற்றுவதற்காக நிதி திட்டமிடல் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டுள்ள முனைவர் எஸ். ரி. ஜி. பர்ணந்து 1984 நவெம்பர் 6 ஆம் நாளிலிருந்து உயர் பதவி வகுப்பு சிறப்புத் தரத்திற்கு உயர்த்தப்பட்டார்.

திரு. ஆர். எம். தென்னக்கூன் 1984 மாச்சு 1 ஆம் நாளிலிருந்து வங்கித் தொழில் அபிவிருத்தி, பயிற்சித் திணைக்களத்திற்கு மதியுரையாளராக நியமிக்கப் பட்டார். வங்கித் தொழில் அபிவிருத்தி பயிற்சி மதியுரையாளர் என்ற அவரின் கடமைகளுக்கு மேலதிகமாக 1984 செத்தெம்பர் 5 ஆம் நாளிலிருந்து வங்கி மேற்பார்வைப் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டார். அவர் 1984 நவெம்பர் 6 ஆம் நாளிலிருந்து உயர் பதவி வகுப்பு சிறப்புத் தரத்திற்கு உயர்த்தப்பட்டு 1984 நவெம்பர் 8 ஆம் நாளிலிருந்து திணைக்களத்தின் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

சொலமன் தீவுகளின் நாணய மேலாண்மைச் சபையில் கடமையாற்றுவதற் காக பன்னாட்டு நாணய நிதியத்திற்கு விடுவிக்கப்பட்ட திரு. என். ஏ. தர்மபந்து 1984 மாச்சு 26 ஆம் நாளிலிருந்து மத்திய வங்கிப் பணிக்கு மீண்டதுடன் பதில் மேலதிக முதன்மைக் கணக்காளராக நியமிக்கப்பட்டார். அவர் 1984 நவெம்பர் 9 ஆம் நாளிலிருந்து முதன்மைக் கணக்காளராக நியமிக்கப்பட்டார்.

பணிமனைத் திணைக்களப் பணிப்பாளர் திரு. பி. எம். நாகாவத்த 1984 சனவரி 13 ஆம் நாளிலிருந்து பணிமனைத் திணைக்களப் பணிப்பாளர் என்ற அவரின் கடமைகளுக்கு மேலதிகமாக மேலதிக முதன்மைக் கணக்காளராக நியமிக்கப் பட்டார்.

மேலதிக செலாவணிக் கட்டுப்பாட்டாளர் திரு. டி. ஏ. பி. வீரவர்த்தன 1984 மே 2 ஆம் நாளிலிருந்து செலாவணிக் கட்டுப்பாட்டாளராக நியமிக்கப் பட்டார்.

கிராமிய வங்கித் தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரிப் பணிப்பாளர் முனைவர் ஜி. எம். அபயரத்ன 1984 மே 2 ஆம் நாளிலிருந்து பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

இலங்கை மகாவலி மேலாண்மைச் சபைக்கு விடுவிக்கப்பட்டிருந்த முனைவர் எம். யூ. ஏ. தென்னக்கூன் 1984 பெப்புருவரி 23 ஆம் நாளில் மத்திய வங்கிப்

பணிக்கு மீண்டார். அவர் உயர் பதவி வகுப்பு தரம் IVஇற்கு பதவியுயர்த்தப்பட்டு 1984 மாச்சு 1 ஆம் நாளிலிருந்து கிராமியக் கொடுகடன் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். 1984 மே 2 ஆம் நாளிலிருந்து கிராமிய வங்கித் தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரிக்குப் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

முனைவர் என். ஈ. எச். சந்திரரத்ன 1984 மாச்சு 1 ஆம் நாளிலிருந்து உயர் பதவி வகுப்பு தரம் IV இற்குப் பதவி உயர்த்தப்பட்டு புள்ளிவிபரவியல் திணைக்களப் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

பூட்டான் அரச நாணய மேலாண்மைச் சபையில் கடமையாற்றுவதற்காக விடுவிக்கப்பட்டிருந்த முனைவர் கெட்டியாராச்சி 1984 ஓகத்து 22 ஆம் நாளிலிருந்து மத்திய வங்கிப் பணிக்கு மீண்டார். அவர் உயர் பதவி வகுப்பு தரம் IV இற்கு பதவி உயர்த்தப்பட்டு வங்கித் தொழில் அபிவிருத்திப் பயிற்சிக்குப் பதில் மதியுரையாளராக 1984 நவெம்பர் 9 ஆம் நாளிலிருந்து நியமிக்கப்பட்டார்.

சியரா லியோன் வங்கியில் கடமையாற்றுவதற்காக பன்னாட்டு நாணய நிதியத்திற்கு விடுக்கப்பட்டிருந்த திரு. ஈ. பாலசிங்கம் 1984 செத்தெம்பர் 17 ஆம் நாளிலிருந்து மத்திய வங்கிப் பணிக்கு மீண்டார். அவர் உயர் பதவி வகுப்பு தரம் IV இற்குப் பதவி உயர்த்தப்பட்டதுடன் 1984 நவெம்பர் 9ஆம் நாளிலிருந்து வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

**விடுவிப்பிலுள்ள அலுவலர்கள் (1984 திசெம்பர் 31 ஆம் நாளில் உள்ளவாறு)**

பின்வரும் வங்கி அலுவலர்கள் இலங்கையின் அமைச்சுக்கள், அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், பன்னாட்டு நாணய நிதியம் ஆகியவற்றில் கடமையாற்றுவதற்காக விடுவிக்கப்பட்டார்கள்:—

நிறைவேற்றுப் பணிப்பாளர் திரு. ஏ. எஸ். ஜயவர்த்தன வங்காளதேசம், பூட்டான், இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளின் மாற்று நிறைவேற்றுப் பணிப்பாளராகப் பன்னாட்டு நாணய நிதியத்திற்கு.

முனைவர் எஸ். ரி. ஜி. பர்னாந்து மக்கள் வங்கியின் தலைவராகக் கடமையாற்றுவதற்காக நிதி திட்டமிடல் அமைச்சிற்கு.

திரு. எஸ். இராசலிங்கம் திறைசேரியில் பொருளாதார அலுவல் பிரிவின் பணிப்பாளராகக் கடமையாற்றுவதற்காக நிதி திட்டமிடல் அமைச்சிற்கு.

திரு. எஸ். ஈஸ்பரதாசன் வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களத்தின் வெளிநாட்டுப் படுகடன் வழிப்படுத்தலும் முகாமைப்படுத்தலும் பிரிவின் பணிப்பாளராகக் கடமையாற்றுவதற்காக நிதி திட்டமிடல் அமைச்சிற்கு.

முனைவர் எல். ஈ. என். பர்னாந்து இலங்கை வங்கியின் தலைவராகக் கடமையாற்றுவதற்காக நிதி திட்டமிடல் அமைச்சிற்கு.

திரு. ஏ. ஏ. டி. ஜஸ்ரின் கைத்தொழில் அறிவியல் அலுவல்கள் அமைச்சின் செயலாளராகப் பணி புரிவதற்குக் கைத்தொழில் அறிவியல் அலுவல்கள் அமைச்சிற்கு.

முனைவர் ஏ. சி. ரந்தெனி, முனைவர் ஜி. அபயசேகரா, முனைவர் ஐ. குமார சுவாமி, திருவாளர்கள் எம். பி. திசநாயக்கா, ஜி. ஏ. பி. பொன்சேகா, ஈ. ஏ. பி. என். டயஸ், யூ. கெட்டியாராச்சி ஆகியோர் நிதி திட்டமிடல் அமைச்சிற்கு.

**ஓய்வுபெற்றோர்**

நிறைவேற்றுப் பணிப்பாளர் திரு. வி. எஸ். சுப்பிரமணியம் 1984 யூன் 24 ஆம் நாளிலிருந்து மத்திய வங்கியின் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளர் திரு. என். பொன்னையா 1984 செத்தெம்பர் 5 ஆம் நாளிலிருந்து மத்திய வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

**இறப்பு**

நாணயத் திணைக்களத்தின் பதில் கண்காணிப்பாளர் திரு. சி. டி. விமல சூரியா 1984 ஓகத்து 15 ஆம் நாளன்று காலமானார்.